# வானவில்

# VAANAVIL

இதழ் 154 | ஐப்பசி 2023

ISSUE 154 | OCTOBER 2023


# இலங்கையின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும்!



இலங்கை 1948 இற்கு முன்னர் சுமார் 400 ஆண்டு காலம் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. இந்த நீண்ட காலகட்டத்தில் இலங்கைக்கு தனது சொந்த இறையாண்மை என்று ஒன்று இருக்கவே இல்லை.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால் பெயரளவில்தான் இந்தச் சுதந்திரம் இருந்ததே தவிர, உண்மையில் அது தன் இறையாண்மையைப் பூரணமாக மீட்டெடுக்கவில்லை. இறையாண்மை என்பது ஒரு நாடு தன் நாட்டின் சகல விடயங்களிலும் சுயாதீனமாக முடிவெடுப்பதையும் செயற்படுவதையுமே குறிக்கும்.

அந்த வகையில் இறையாண்மை என்பது இரண்டு வகைப்பட்டது. ஒன்று அரசியல்ரீதியிலானது, மற்றது பொருளாதார ரீதியிலானது.

அரசியல் ரீதியிலானது எனும் போது, நாட்டின் அரசியல் அமைப்பு அதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து மூன்று அரசியல் அமைப்புகளின் கீழ் நாடு இருந்து வந்துள்ளது.

முதலாவது அரசியல் அமைப்பு, சுதந்திர இலங்கைக்காக சோல்பரி என்ற பிரித்தானியரால் வரையப்பட்டது. இலங்கையைத் தனது காலனியாக வைத்திருந்த ஒரு ஏகாதிபத்திய நாட்டின் பிரதிநிதி ஒருவரால் வரையப்பட்ட அரசியல் அமைப்பு என்றால் அது எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இலங்கைக்கு பிரித்தானியா 1948 இல் சுதந்திரம் வழங்கினாலும், தொடர்ந்தும் தமது மறைமுகக் காலனியாக வைத்திருக்கும் வகையிலேயே அந்த அரசியல் அமைப்பு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது.

பின்னர் 1972 இல் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவைப் பிரதமராகக் கொண்டிருந்த 'மக்கள் முன்னணி' அரசாங்கத்தால் புதிதாக குடியரசு அரசியல் அமைப்பொன்று அறிமுகம் செய்யப்பட்டது. இந்த அரசாங்கம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்ற தேசியவாதக் கட்சியின் தலைமையில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சியையும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியையும் பங்காளிகளாகக் கொண்டிருந்தது.

முன்னைய சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் இலங்கை பிரித்தானிய முடியரசின் கீழ் தொடர்ந்தும் இருந்து வந்த நிலையை புதிய குடியரசு அரசியல் அமைப்பு இல்லாதொழித்தது. அத்துடன் தேசிய ரீதியிலான பல அம்சங்களையும் அது கொண்டிருந்தது. அந்த வகையில் ஒப்பீட்டு வகையில் முன்னைய சோல்பரி அரசியல் சாசனத்தை விட இது முற்போக்கானதாக இருந்தது. ஆனால் இலங்கையை பல்லினங்கள் வாழும் ஒரு ஜனநாயக நாடு என்ற அடிப்படையை முன்னிறுத்துவதற்குப் பதிலாக நாட்டின் பெரும்பான்மை மக்களான சிங்களவர்களின் சிங்கள மொழியையும், அவர்கள் பின்பற்றும் பௌத்த மதத்தையும் இந்த அரசியல் அமைப்பு முதன்மைப்படுத்தியது. அதன் காரணமாக, இந்த குடியரசு அரசியல் அமைப்பு தமிழ் மொழி பேசும் சிறுபான்மை இனங்களின் ஆதரவைப் பெறத் தவறியது.

இந்தச் சூழ்நிலையில்தான் ஏகாதிபத்திய

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# சியோனிசத்தை முற்றாகத் தோற்கடிக்க பலஸ்தீனியர்கள் ஐக்கியப்பட வேண்டும்

மத்தியதரைக்கடல் ஓரத்தில் எகிப்திற்கு வடக்காக 365 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைக் கொண்ட பகுதிதான் பலஸ்தீன மக்கள் வாழும் காசா என்ற நிலப்பரப்பு. காசாப்பகுதியின் நிர்வாகம் ஹமாஸ் என்ற அமைப்பின் கீழுள்ளளது. இதைவிட காசாவிற்கு வடகிழக்குப் புறமாக, ஜோர்டான் ஆற்றிற்கு மேற்கு கரைப் பகுதியிலும் 5665 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் பலஸ்தீன மக்கள் வாழுகிறார்கள். இந்த மேற்குக்கரை நிர்வாகம் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கீழுள்ளது. 1948 ஆம் ஆண்டு இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட முன்னர், தற்போதைய இஸ்ரேல் உள்ளடங்கிலான பலஸ்தீனம் என்ற மண்ணில் பரந்து வாழ்ந்த மக்கள், தற்போது காசாவிலும் மேற்குக்கரையிலுமே வாழ்கிறார்கள். பலஸ்தீன மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டு, அந்நிலங்களில் யூதர்கள் குடியேற்றப்பட்ட தற்போதைய இஸ்ரேலின் நிலப்பரப்பு 22145 சதுர கிலோமீற்றராக உள்ளது என்றால், பலஸ்தீன மக்கள் எவ்வளவு சிறிய நிலப்பரப்பில் ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பது புரியும்.

ஹமாஸ் அமைப்பின் இராணுவம் ஒக்ரோபர் 7ந திகதி இஸ்ரேலில் புகுந்து தாக்குதல் நடாத்தினார்கள். இந்தத் தாக்குதலில் இஸ்ரேலிய இராணுவமும் பொதுமக்களுமாக குறைந்தது 1400 பேர் உயிரிழந்தும் 4000 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல், காசா மற்றும் மேற்கு கரையோரம் வாழும் பலஸ்தீன மக்கள் மீது பல ஆயிரக்கணக்கான விமானக் குண்டுகளையும எறிகணைகளையும் வீசி வருகின்றது. இதன் உச்சக்கட்டமாக ஒக்ரோபர் 17ந திகதி காசாவின் மருத்துவமனையொன்று எறிகணைத் தாக்குதலுக்குள்ளாகி 471 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 13 நாட்களாகத் தொடரும் இஸ்ரேலின் கண்மூடித்தனமான இத்தாக்குதல்களில் (இத்தலையங்கம் எழுதிக் கொண்டிருக்கும் கணம்வரை) மொத்தமாக 4200 பேர் கொல்லப்பட்டும் 14300 பேர் வரையில் காயமடைந்துமுள்ளனர்.

பலஸ்தீன மண்ணில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்த மக்களினதும், அவர்களை சூழ்ந்து வாழ்ந்த அரபு மக்களினதும் அனுமதியின்றி, உலக வல்லரசுகளினால் உருவாக்கப்பட்ட இஸ்ரேல் நாட்டிற்கு எதிராக, 75 ஆண்டுகளாக பலஸ்தீன மக்கள் போராடி வருகின்றனர். இஸ்ரேலிற்கு பக்கபலமாக எப்போதுமே அமெரிக்கா இருப்பதால் பலஸ்தீன மக்களால் எதுவுமே செய்ய முடியாதிருக்கின்றது. அத்தோடு பிரித்தானியாவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் இஸ்ரேலிற்கு உறுதியாக தமது ஆதரவையளித்து வருகிறார்கள்.

இரண்டாம் உலகமகாயுத்தத்தில் ஹிட்லரின் நாசிப்படைகள் ஐரோப்பாவில் 6 மில்லியன் மக்களைக் கொன்றதற்கு பரிகாரமாகவே ஆயிரக்கணக்கான வருடங்களிற்கு முன்னர் யூதர்கள் வாழ்ந்த மண்ணில் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதாக அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூறி வந்தாலும், உண்மை அதுவல்ல. 1917 ஆம் ஆண்டிலேயே பலஸ்தீனத்தை காலனியாக வைத்திருந்த பிரித்தானியா யூதர்களுக்கு என்றொரு நாட்டினை பலஸ்தீனத்தில் உருவாக்கித் தருவதாக பிரகடனம் செய்திருந்தது.

முதலில் அரபு மற்றும் பல முஸ்லீம் நாடுகள் இஸ்ரேல் என்ற நாட்டை அங்கீகரிக்காது, பலஸ்தீன மக்களுக்கு ஆதரவினை வழங்கி வந்தார்கள். ஆனால் அமெரிக்கா அந்நாடுகளிடையேயும் பிளவுகளை ஏற்படுத்தி தன்வசப்படுத்தியதோடு, இஸ்ரேலை அங்கீகரிக்கப் பண்ணி பலஸ்தீன மக்களின் போராட்டத்தையும் தன்னால் முடிந்தளவிற்கு பலவீனப்படுத்தி வருகின்றது.

போராட்டம் என்று வந்தால் கருத்து வேறுபாடுகளும் முரண்பாடுகளும் தவிர்க்க முடியாதது. இதனால் பலஸ்தீன மக்களுக்காக பல்வேறு குழுக்கள் ஜனநாயக ரீதியாகவும் ஆயுதமேந்தியும் போராடி வருகின்றன. இவற்றுள் பலஸ்தீன விடுதலை இயக்கமும் ஹமாஸ் இயக்கமும் ஒப்பீட்டளவில் பெரிய அமைப்புகளாக உள்ளன. 10 ஆயுதப் போராட்ட அமைப்புகள் இணைந்து 1964 ஆம் ஆண்டு பலஸ்தீன விடுதலை இயக்கத்தை உருவாக்கினார்கள். இஸ்ரேலை அழித்து பலஸ்தீன தேசத்தை உருவாக்குவதையே பலஸ்தீன விடுதலை இயக்கம் நோக்கமாகக் கொண்டிருந்தது. பின்னர் 1993 இல் இஸ்ரேலுடன் ஒஸ்லோவில் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டு, பலஸ்தீன மண்ணில் இஸ்ரேலின் இருப்பை அங்கீகரித்தார்கள்.

இப்போது பலஸ்தீன விடுதலை இயக்கம் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் செல்வாக்கைப் பெறுவதற்காக தன்னை ஒரு ஜனநாயக அமைப்பாக நிலை நிறுத்தியுள்ளது. பலஸ்தீன விடுதலை இயக்கம் வன்முறைப் பாதையை கைவிடும் காலகட்டமாகிய 1987 ஆம் ஆண்டிலேயே, ஹமாஸ் என்ற புதிய ஆயுதப் போராட்ட இயக்கம் தோன்றியது. தற்போது ஹமாஸ், காசாப்பபகுதியில் மாத்திரமன்றி மேற்கு கரையிலும் பலஸ்தீன மக்களின் அதிக ஆதரவு கொண்ட அமைப்பாக விளங்குகின்றது.

பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த மேற்குலக நாடுகள், ஒரு போராட்டத்தை பலவீனப்படுத்தி தம்வசப்படுத்த, அதனையே பிரயோகிக்கின்றனர். முதலில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் செல்வாக்கை முறியடிக்க ஹமாஸை பயன்படுத்த முயற்சித்தார்கள். இதனால் இரு பகுதியினருக்குமிடையே அவ்வப்போது வன்முறை மோதல்களும் நிகழ்ந்தன. இப்போது ஹமாஸின் வளர்ச்சியைப் பார்த்து, அதற்கெதிராக பலஸ்தீன விடுதலை இயக்கத்தை நிறுத்தியுள்ளனர். அதாவது ஹமாஸை பயங்கரவாத அமைப்பாக பிரகடனப்படுத்தி, பலஸ்தீன மக்களின் பிரதிநிதியாக பலஸ்தீன விடுதலை இயக்கதத்துடன் மாத்திரமே ராஜதந்திர உறவுகளை பேணி வருகின்றனர்.

ஹமாஸின் பாரிய தாக்குதலால் இஸ்ரேல் மாத்திரமன்றி இஸ்ரேலை கண்மூடித்தனமாக ஆதரிக்கும் அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளும் நிலைகுலைந்து போயுள்ளனர். காசா மீது தரைமார்க்கமான தாக்குதலை விரைவில் மேற்கொள்ளப் போவதாக இஸ்ரேல் பயமுறுத்திய வண்ணமுள்ளது. அதே நேரத்தில் பலஸ்தீனியர்களும் இஸ்ரேலுக்கு சமபலமாக ஆயுதந்தாங்கி போராட முடியும் என்ற உத்வேகத்தை அவர்களுக்கு வழங்கியுள்ளது. அதாவது 75 வருட கால பலஸ்தீன மக்களின் துயரங்களுக்கு முடிவு காணும் தருணம் நெருங்கிவிட்டதாகவே அவர்களும், அவர்களுக்கு உறுதுணையாக நிற்கும் உலக நாடுகளில் வாழும் மக்களும் நம்பத் தொடங்கி விட்டார்கள். இந்நேரத்தில் பலஸ்தீனியர்கள் செய்ய வேண்டியதெல்லாம், தமது கருத்து வேறுபாடுகளை மறந்து உறுதியாக ஐக்கியப்பட்டுப் போராட வேண்டும் என்பதே.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

*‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ *இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.*

# அண்மைக்கால சர்வதேச அரசியல் நிகழ்ச்சி போக்குகள்



**உ. வாசுகி**
**(இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்)**

உலக முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி, இதன் விளைவாக பொருளாதார வளர்ச்சி விகிதம் மந்தம், பணவீக்கம், விலை உயர்வு, குறிப்பாக உணவுப் பொருட்களின் விலை ஏற்றம், உண்மை ஊதிய (Real wages) வீழ்ச்சி போன்றவை தொடர்கின்றன. இதனால் ஏற்படும் சுமை, உழைக்கும் மக்களின் தோள்கள் மீது ஏற்றப்படுவதும் தொடர்கிறது. அவர்களின் மீதான சுரண்டல் அதிகரித்து, கடும் பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. பல்வேறு சர்வதேச முகமைகள் கணித்ததை விட வளர்ச்சி விகிதம் குறைந்தே உள்ளது.

**உழைப்பு சுரண்டலும் இலாப வேட்டையும்**

நவீன தாராளமயம் (Neo liberalism), உலக முதலாளித்துவ நெருக்கடிக்கு எவ்வித தீர்வையும் அளிக்க இயலவில்லை என்பது மீண்டும், மீண்டும் நிரூபிக்கப்படுகிறது. ஆனால் அதே சமயம், இலாப வேட்டை அதிகரிப்பு என்கிற அதன் நோக்கத்தில் முன்னேறிக் கொண்டுதான் வருகிறது. இதன் பொருள், உழைப்பு சுரண்டல் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது என்பதுதான். 23வது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் அரசியல் தீர்மானம், "சர்வதேச நிதி மூலதனம் வழி நடத்தும் நவீன தாராளமய பாதை, வருமான மற்றும் செல்வ சமத்துவமின்மை விரிவடைந்து வருவதை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது, இலாப வேட்டை என்ற நவீன தாராளமயத்தின் நோக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

22வது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் சுட்டிக் காட்டியபடி, பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான வழிமுறையை முன்வைப்பதில், நவீன தாராளமயம் திவால் நிலையை அடைந்துள்ளது. சொல்லப் போனால், நவீன தாராளமயத்தின் கொள்கைகளும் வழிமுறைகளும்தான் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்துகின்றன. இலாப வேட்டையையே பிரதான குறிக்கோளாக அது கொண்டுள்ளது என்பது நெருக்கடியை தீவிரப்படுத்துகிறது" என விளக்குவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

குறிப்பாக உலக அளவில் சராசரி ஊதியத்தில் வீழ்ச்சி ஏற்பட்டு இருப்பதில் இது பிரதிபலிக்கின்றது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அறிக்கையின்படி, 2022 ஆண்டின் முதல் பாதியில், மாதாந்திர உண்மை ஊதியம் மைனஸ் (minus) 0.9 விழுக்காடு அளவிற்கு சரிந்திருக்கிறது. இது 2008 இற்கு பின்னர் ஏற்பட்டுள்ள, முதல் எதிர்மறை வளர்ச்சி ஆகும். சீனாவின் உயர் ஊதிய வளர்ச்சியை விலக்கி வைத்து பார்த்தால், உண்மை ஊதியம் 1.9 விழுக்காடு வீழ்ந்திருக்கிறது. இன்னும் திட்ட வட்டமாக சொல்ல வேண்டுமென்றால், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பின் (Organization for Economic Co-operation and Development - OECD) அறிக்கையின்படி, அதன் 34 உறுப்பு நாடுகளில் 31 இல் உண்மை ஊதியம் சராசரியாக 3.8 விழுக்காடு வீழ்ச்சி அடைந்து, எதிர்மறை வளர்ச்சியாக ஆகி உள்ளது. ஜி 20 கூட்டமைப்பில் உள்ள வளர்ச்சி அடைந்த நாடுகளில் கூட, உண்மை ஊதியத்தில் எதிர்மறை வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இதில் பாலின அசமத்துவமும் உண்டு. அதாவது, உலக அளவில் ஆண்கள் பெறும் ஊதியத்தில் 82% மட்டுமே பெண்கள் சராசரியாக ஈட்டுகிறார்கள்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு, நடுத்தர வர்க்கத்தின் வாங்கும் சக்தி கூட குறைந்து இருப்பதையும், பல கோடி தொழிலாளிகள் ஒரு நிச்சயமற்ற எதிர்காலத்தோடு மிக மோசமான நிலையில் உள்ளதையும் சுட்டிக்காட்டுகிறது. அதிகரித்து வரும் வறுமையை கட்டுப்படுத்த, பொருத்தமான கொள்கைகள் அவசர அவசிய தேவை என எச்சரிக்கை விடுத்துள்ளது.

பெரும் சவாலாக எழுந்துள்ள பண வீக்கத்தை எதிர்கொள்ள, அமெரிக்க 'ஃபெடரல் ரிசர்வ் வங்கி' (Federal Reserve Bank), கடன்களின் மீதான வட்டி விகிதத்தை அதிகரித்து உள்ளது. பல்வேறு நாடுகளிலும் மத்திய வங்கிகள் இவ்வாறு கடன்களின் மீதான வட்டி விகிதங்களை உயர்த்தி உள்ளன. இது பொருளாதார வளர்ச்சியை பாதிக்கும் வேலை வாய்ப்புகள் மேலும் சுருங்கும்.

**சீனப் பொருளாதாரம்**

மக்கள் சீனத்தைப் பொறுத்தவரை, 2023 இல் அதன் பொருளாதாரம் 5.2 விழுக்காடு விகிதத்தில் வளர்ச்சி அடையும் என சர்வதேச நிதி நிறுவனம் கணித்திருக்கின்றது. கடந்த ஜூலையில், அரையாண்டு பொருளாதார நிலைமையை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை குழு ஆய்வு செய்ததில், பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்கிறது என்ற போதிலும், புதிய சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது என்பது வெளிப்பட்டுள்ளது. குறிப்பாக, உள்நாட்டு கிராக்கி போதுமான அளவிற்கு இல்லை என்பது ஒரு முக்கிய காரணியாக முன்னுக்கு வந்துள்ள சூழலில், அறிவியல் தொழில்நுட்ப முனைப்புகள், சிறு, குறு,

நடுத்தர தொழில்கள் ஆகியவற்றுக்கான ஆதரவு நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு கிராக்கியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பல நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சூழலில் அமெரிக்க ஏகாதிபத்தியம், ரஷ்யாவையும் சீனாவையும் தனிமைப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 23வது அகில இந்திய மாநாட்டு அரசியல் தீர்மானத்தில், சர்வதேச அளவில் முன்னுக்கு வருகிற முக்கிய போக்குகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதில் ஒன்று, உலகப் பொருளாதார நெருக்கடி ஆழமாகிக் கொண்டிருக்கிறது என்பது. மற்றொன்று, சீனாவினுடைய வளர்ச்சி மற்றும் அதனை மட்டுப்படுத்தி, தனிமைப்படுத்துவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் எடுக்கும் முயற்சிகள் என்பது முன்வைக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒன்றரை ஆண்டு காலத்தில் அரசியல் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவை நடந்தேறி வருகின்றன.

**சீனாவைக் குறி வைத்து**

சீனாவின் வளர்ச்சியும், உலகளாவிய செல்வாக்கும் அதிகரித்து வருவது, தனது மேலாதிக்கத்தை அச்சுறுத்துவதாக அமெரிக்க ஏகாதிபத்தியம் கருதுகிறது. சென்ற மத்திய குழு அறிக்கையில் சீனாவின் செல்வாக்கு பல்வேறு நாடுகள் மத்தியில் வளர்ந்து வருவது குறிப்பிடப்பட்டிருந்தது. ஏற்கனவே, சீனா உலக அளவில் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தியாக உள்ளது. 2021 ஆம் ஆண்டிலேயே தீவிர வறுமையை ஒழித்து விட்டது. உலக அளவில் நடைபெற்ற வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் 70 சதவிகிதம் சீனாவில் மட்டும் நடந்ததாக உலக வங்கியின் அறிக்கை கூறுகிறது.

சீனாவின் ‘பெல்ட் ரோடு’ (Belt Road) முன்முயற்சியில் 150 நாடுகள் இணைந்துள்ளன. எனவே சோஷலிச சீனா, சித்தாந்த ரீதியாக தமது கேந்திர எதிரி என்ற அடிப்படையில் அதனைத் தனிமைப்படுத்துவது, அதன் வளர்ச்சியை மட்டுப்படுத்துவது என்கிற நோக்கத்தோடு பல முனைகளில் அமெரிக்கா செயல்பட்டு வருகிறது. சீனாவுக்கு எதிராக பொருளாதார மற்றும் வணிக தடை விதிப்பது அதில் ஒன்று. மற்றொரு நடவடிக்கையாக, தமது தலைமையிலான நேட்டோ, (வட அட்லாண்டிக் நாடுகளின் இராணுவக் கூட்டணி) என்ற நிலையை மாற்றி உலக அளவிலான இராணுவ கூட்டணியாக, குறிப்பாக, ஆசிய பசிபிக் பிராந்தியத்தை குறிவைத்து மாற்ற வேண்டும் என அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

G7 மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை சீனாவுக்கு எதிராக அமெரிக்கா பயன்படுத்துகிறது. அதாவது, சீனாவை தனிமைப்படுத்துவதற்கான மேலாதிக்க சூழ்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க முயற்சிக்கிறது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியம் மனித உரிமை மீறல் பிரச்சனைகளில் சீனாவுக்கு எதிர் நிலை எடுக்கிறதே தவிர, பொருளாதார மற்றும் வணிக தடை விதிப்பதில் முழுமையாக அமெரிக்கா பக்கம் நிற்பதாக கூற முடியாது. இருப்பினும், அமெரிக்காவின் முனைப்புகள் தொடர்கின்றன. மறுபக்கம் கிழக்கு நோக்கிய விரிவாக்கம் என்கிற பெயரில், ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டு வருகிறது.

இந்த அரசியல் நோக்கத்தோடுதான் நேட்டோ உச்சி மாநாடு முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் ஒரு பகுதியாக இருந்த லித்துவேனியாவில் நடத்தப்பட்டது. நேட்டோவின் உறுப்பு நாடுகளாக இல்லாத போதிலும், ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலியா, உக்ரைன் மற்றும் நியூசிலாந்து நாடுகள் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டன. சீன எதிர்ப்பு உத்தியின் ஒரு பகுதியே இது.

மேலும் தாய்வானுக்கு இராணுவ உதவி தொகுப்பாக, சுமார் 345 மில்லியன் டொலர்கள் அமெரிக்காவால் அறிவிக்கப்பட்டுள்ளன. ஒரு பில்லியன் டொலர் வரை தாய்வானுக்கு உதவி செய்வதற்கு, ஏற்கனவே அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்திருக்கிறது, பட்ஜெட்டிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 19 பில்லியன் டொலர் மதிப்புள்ள போர் விமானங்களும், இதர நவீன ஆயுதங்களும் தாய்வானுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சீன ஊடுருவலில் இருந்து தாய்வான் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக, இத்தகைய உதவி செய்யப்படுவதாக அமெரிக்கா ஒரு தோற்றத்தை கொடுக்கிறது. ஆனால் 1972 இல் வெளியிடப்பட்ட அமெரிக்க சீன கூட்டறிக்கையில், தாய்வான் சீனாவின் எல்லைக்கு உட்பட்ட பகுதி, அதையும் சேர்த்து ஒரே சீனா தான் என்பது தெளிவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இன்றுவரை அதிகாரப்பூர்வமாக அந்த நிலையில் இருந்து பின்வாங்குவதாக அமெரிக்கா அறிவிக்கவில்லை. ஆனால் அதிகாரப்பூர்வமற்ற முறையில் தாய்வானோடு ஒரு நெருக்கத்தை பராமரித்து வருகிறது.

1949 சீனப் புரட்சியின் போது சியாங் கை ஷேக் (Chiang Kai-shek) உள்ளிட்ட எதிர்ப்புரட்சியாளர்கள் தப்பி ஓடியது தாய்வானுக்குத்தான். அன்றிலிருந்து சோசலிச சீனாவுக்கு எதிராக தாய்வானோடு அமெரிக்காவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் உறவு இருந்து வருகிறது. தற்போதைய சூழலில், சீனாவின் வேகமான தொழில்நுட்ப வளர்ச்சியில் ‘செமிகண்டக்டர் சிப்ஸ்’ (semiconductor chips) உள்ளிட்ட பாகங்கள், பிரதானமாக தாய்வான் மூலம் கிடைத்து வருகின்றன. அதில் தடங்கலை ஏற்படுத்தினால், சீனாவின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலைகுலையும் என அமெரிக்கா கணக்கு போடுகிறது.

ஏற்கனவே, சீனாவில் அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. சீன பொருட்களை அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளி நாடுகள் வாங்குவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் சீனாவுக்கு நெருக்கடி கொடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆகும். இச்சவாலை எதிர்கொள்ள, உள்நாட்டிலேயே செமிகண்டக்டர் சிப்ஸ் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளையும் சீனா மேற்கொண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் பெரும்பாலும் அமெரிக்காவின் சீன எதிர்ப்பு நிலையிலிருந்து வேறுபட்டு, சீனாவோடு சுமுகமான உறவைப் பராமரித்து வருகின்றன. விதிவிலக்காக இந்தியா, தென்கொரியா, ஜப்பான் போன்றவற்றை சொல்லலாம். குறிப்பாக இந்தியா, குவாட் (QUAD) என்கிற அமெரிக்காவின் நான்கு நாடுகளின்

கூட்டணியில் இடம் பெற்று இருக்கிறது. அண்மையில், அவுஸ்திரேலிய கடல் பகுதியில் இந்த நான்கு நாடுகளின் கப்பல் படைகள் பயிற்சி செய்தன. இதன் மூலம் அமெரிக்காவின் இந்திய பசிபிக் பிராந்திய சீன எதிர்ப்பு கொள்கையுடன் இந்தியா உடன்படுகிறது. அமெரிக்க நலனுக்கான புவி அரசியல் கொள்கையில் இந்தியா ஒருங்கிணைவது பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கும்.

**அமெரிக்க நேட்டோ வரைவு**

ரஷ்யா – உக்ரேன் போர் துவங்கி ஓராண்டுக்கு மேல் ஆகிறது. லித்துவேனியாவில் நடந்த நேட்டோ உச்சி மாநாடு, நவீன ஆயுதங்கள், இராணுவ தளவாடங்கள் உட்பட அனைத்து உதவிகளையும் உக்ரைனுக்கு வழங்குவதாக தீர்மானித்துள்ளது. சமீபத்தில் பின்லாந்து, நேட்டோவில் உறுப்பினராக இணைந்துள்ளது. சுவீடன் விரைவில் இணையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ரஷ்ய எல்லையோடு நேட்டோ நாடுகள் எல்லை பகிர்வு கடந்த காலத்தை விட தற்போது இருமடங்காகி உள்ளது. ஏற்கனவே நோர்வே, லாட்வியா, எஸ்டோனியா, லித்துவேனியா, போலந்து நாடுகளின் எல்லை ரஷ்யா உடன் 754 மைல் தூரத்தை பகிர்ந்து கொண்டு இருந்தன. பின்லாந்து இணைப்புக்கு பிறகு அது 1584 மைலாக உயர்ந்துள்ளது.

நேட்டோவின் இந்த வளர்ச்சி போக்கு, ரஷ்யாவின் பாதுகாப்புக்கு கூடுதல் அச்சுறுத்தலை உருவாக்குகிறது. எனவே ரஷ்யா தனது துருப்புகளை இப்பகுதியில் அதிகரிக்க போவதாக கூறியுள்ளது. ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டி காட்டி வருவது போல், நடக்கின்ற போர் ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலானது என பார்க்கக் கூடாது, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ நாடுகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நடக்கும் மோதலின் வெளிப்பாடுதான் இப்போர் என்பது மேற்கூறிய நிகழ்ச்சிகளிலிருந்து பிரதிபலிக்கிறது.

அமெரிக்காவுடன் சேர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ரஷ்யா உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு எதிராக நிலைபாடு எடுத்து, இராணுவ ரீதியாக உதவினாலும், மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பான்மையான நாடுகள், ரஷ்யாவோடு நட்புறவில் உள்ளன. இந்தியாவும் கூட, பல்வேறு காரணங்களுக்காக ரஷ்ய எதிர்ப்பு நிலையை எடுக்கவில்லை.

‘எக்கானமிஸ்ட் இன்டெலிஜென்ஸ் யூனிட்’டின் (Economic Intelligence Unit) ஆய்வறிக்கையின்படி, ரஷ்யா மீது மேலை நாடுகள் விதித்த பொருளாதார தடை சம்பந்தப்பட்ட அணுகுமுறை, ஐ.நா சபையில் வாக்களிக்கும் தன்மை, அதிகாரப்பூர்வ அறிக்கைகள் வெளியீடு, அரசியல், பொருளாதார, இராணுவ, வரலாற்று ரீதியான உறவுகள் இவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்தால், ரஷ்யாவை ஆதரிக்கும் நாடுகளின் எண்ணிக்கை நடந்த ஓராண்டில் 29 இலிருந்து 35 ஆக உயர்ந்துள்ளது. உலக மக்கள் தொகையில் இந்நாடுகள் 33 சதவீதம். நடுநிலை வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை 31 இலிருந்து 35 ஆக அதிகரித்துள்ளது. உலக மக்கள் தொகையில் இந்நாடுகள் 31 சதவீதம்.

கொலம்பியா, துருக்கி, கத்தார் போன்றவை மேற்கத்திய நாடுகளை ஆதரித்த நிலையை மாற்றிக் கொண்டு, தற்போது நடுநிலை நாடுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இந்தியாவை, நடுநிலை நாடுகள் பட்டியலில் இந்த ஆய்வறிக்கை வைக்கிறது. உக்ரைன் போரில் ரஷ்யாவை கண்டித்த நாடுகளின் எண்ணிக்கை 131 இலிருந்து 122 ஆக குறைந்துள்ளது. உலக மக்கள் தொகையில் இவை 36 சதவீதம். பொதுவாக பல்வேறு நாடுகளில் இராணுவ தலையீடு செய்யும் அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு, இந்த போரில் ரஷ்யாவை விமர்சிப்பதற்கான தகுதி இல்லை என்ற வாதம் ரஷ்யா மற்றும் சீனாவால் வலுவாக முன்வைக்கப்படுகிறது.

இந்த வளர்ச்சிப் போக்குகளை தனிமைப்படுத்தி பார்க்க இயலாது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய உலகளாவிய மேலாதிக்க சூழ்ச்சி நடவடிக்கைகளின் காரணமாக, உலகத்தை புதியதொரு பனிப்போர் நிலைக்கு தள்ளிக் கொண்டிருக்கிறது. இது கவலைக்கும் கண்டனத்திற்கும் உரியதாகும். அதே சமயம் உலகில் பல பாகங்களில் பல் துருவ வளர்ச்சி போக்குகள் காணப்படுவது, அனைத்தும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை உணர்த்துகின்றது.

# கவலைக்கிடமான நிலையில்!



உலகளாவிய பசி குறியீட்டு (GLOBAL HUNGER INDEX) அறிக்கையில் 125 நாடுகளில் இந்தியா 111 வது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆண்டை விட இந்தியா 4 இடங்கள் சரிந்துள்ளது. தீமோர், மொசாம்பிக், ஆப்கானிஸ்தான், ஹெயிட்டி, கினியா, லைபீரியா, நைஜர், கொங்கோ, யேமன், தெற்கு சூடான், சோமாலியா போன்ற நாடுகளே இந்தியாவை விட குறைந்த தரவரிசையில் உள்ளன.

இந்தியாவை விட சிறப்பாக செயல்பட்ட பல நாடுகள் இந்தியாவுடன் ஒப்பிடும்போது மிகச் சிறிய பொருளாதாரங்களை கொண்டவை. ஆனால் உலகப் பொருளாதாரத்தில் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என்று ஒன்றிய அரசு பெருமிதப்பட்டுக் கொண்டாலும் பசி, வறுமை ஒழிப்பு, ஊட்டச்சத்து குறைபாடு உள்ளிட்ட மக்களின் ஆரோக்கியம் தொடர்புடையவற்றில் மிகவும் பின்தங்கி கவலைக்கிடமாகவே உள்ளது. உலகளவில் பட்டினியின் அளவு ‘தீவிரமானது’ என்று அழைக்கப்படும் 40 நாடுகளின் குழுவில் இந்தியா உள்ளது.

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...**

# அலைகள் ஓய்வது எப்போது?



கடந்த வருடம் (2022) இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன் பிடித்த குற்றச்சாட்டில் 264 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்ததுடன், அவர்கள் பயன்படுத்திய 36 மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

அதற்கு முதல் வருடம், அதாவது 2021 இல், 243 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்களது 30 மீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

பல பில்லியன் ரூபா பெறுமதியான இலங்கையின் கடல் வளங்களை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய மீனவர்கள் இவ்வாறு சுரண்டி வருகின்றனர். இலங்கையைச் சுற்றியுள்ள வங்காள விரிகுடாக் கடல், பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா பகுதி என்பனவற்றிலேயே இந்த இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகள் நிகழ்கின்றன.

1960 களில் வெளிவந்த சில பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கும் போது, இலங்கை கடல் பரப்புக்குள் அத்துமீறிச் சென்று மீன் பிடியில் ஈடுபட வேண்டாம் என இந்திய கடற்படை உட்பட இந்திய அதிகாரிகள் எச்சரிக்கை செய்திருப்பது தெரிய வருகிறது. இருந்தும் கடந்த 60 ஆண்டுகளாக இலங்கைக் கடலுக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன் பிடிப்பது தொடர்கிறது. அவர்கள் இவ்வாறு சட்டத்தை மதிக்காமல் செயல்படுவதற்குக் காரணம், அவர்களுக்கு தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் ஆதரவு இருப்பதுதான். இன்னும் சொல்லப்போனால், இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடும் படகுகளில் பெரும்பாலானவை தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்குச் சொந்தமானவையாகும். ஆனால் இந்த அத்துமீறலின் போது இலங்கை கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறப்பவர்கள் இந்தப் படகுகளில் அன்றாடச் சீவனோபாயத்துக்காக கூலி வேலை செய்யும் சாதாரண அப்பாவி ஏழை மீனவர்களே.

**அ.மரியதாசன்**

இலங்கையில் உள்நாட்டுப் போர் நடந்த காலத்திலும் கூட, இலங்கை கடற்படையின் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியிலும் கூட இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருந்தது. போர்க்காலத்தில, இந்திய மீன்பிடிப் படகுகள் இலங்கைக் கடலில் அத்துமீறிய மீன்பிடியில் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை. இலங்கை அரசுடன் தனிநாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அனைத்து இயக்கங்களுக்கும் அவர்களுக்குத் தேவையான ஆயுதங்கள் முதல் எல்லாப் பொருட்களையும் இந்தியாவிலிருந்து கடத்தி வந்து கொடுத்திருக்கிறார்கள். அதன் காரணமாக இந்த ஈழப் போராட்ட இயக்கங்கள் அனைத்துமே இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டும் காணாமல் இருந்து வந்துள்ளனர்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்லலாம். புலிகளின் தீவிர ஆதரவாளரான தமிழ்நாட்டு அரசியல்வாதி வை.கோபாலசாமி ஒருமுறை சட்ட விரோதமான முறையில் படகு மூலம் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துவிட்டு தமிழ்நாடு திரும்புகையில், மன்னாரில் உள்ள இலங்கைக் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களுக்கு கடல் புலிகளின் படகுகள் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்ததை நேரடியாகக் கண்டதாக தனது கட்டுரையொன்றில் கூறியிருக்கிறார்.

இலங்கைத் தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக நடத்தும் போராட்டத்துக்கு தமது ஆதரவு எப்பொழுதும் உண்டு என தமிழகத்தின் அனைத்து அரசியல் கட்சிகளும் அடிக்கடி பிரகடனம் செய்வதுண்டு. இலங்கைத் தமிழர்கள் தமது "தொப்புள்கொடி உறவுகள்" என சினிமா பாணியில் வசனங்கள் பேசுவதும் உண்டு. ஆனால் வீர வசனங்களை எல்லாம் ஒருபக்கம் தூக்கி வீசிவிட்டு, இலங்கையின் வட பகுதியில் வாழும் அதே தமிழ் தொப்புள்கொடி உறவுகளின் கடல் வளங்களை அல்லவா தமிழக மீனவர்கள் சுருட்டிச் செல்கின்றனர்!

இதைத்தான், "தாயும் பிள்ளையும் ஒன்றென்றாலும், வாயும் வயிறும் வேறு" என்ற தமிழ் முதுமொழி குறிப்பிடுகின்றது போலும்!

இந்திய மத்திய அரசைப் பொறுத்த வரையிலும்கூட, இலங்கைக்கு கஸ்டங்கள் வரும் வேளையில் தாங்கள்தான் முதன் முதலில் ஓடி வந்து உதவி செய்பவர்கள் எனப் பெருமை பேசுவதுண்டு. கடந்த வருடம் இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த போது, இந்தியா 3 பில்லியன் டொலர்கள் நிதியுதவி அளித்ததும் உண்மையே. (அதற்கான புவிசார் அரசியல் காரணங்கள் இருக்கின்றன)

ஆனால், அதேநேரத்தில், அதைவிடப் பட மடங்கு பெறுமதியான கடல் வளங்களை இலங்கையிடமிருந்து சுருட்டிச் செல்கிறார்களே! இந்த விடயம் குறித்து சில வருடங்களுக்கு முன்னர் கருத்துத் தெரிவித்த வட மாகாண கடல் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.வி.சுப்பிரமணியம், 'இந்திய மீனவர்கள் ஆண்டு தோறும் இலங்கை கடல் பரப்பில் இருந்து அள்ளிச் செல்லும் கடல் வளங்களின் பெறுமதி 900 பில்லியன் ரூபா பெறுமதி வரை வரும்' எனக் குறிப்பிட்டிருக்கிறார்!

இந்திய மீனவர்கள் மீன் பிடிக்கப் பயன்படுத்துவது பாரிய ரோலர் படகும், மடி வலையுமாகும். அந்த மடி

வலையில் வளர்ந்த மீன்கள் மட்டும் அகப்படுவது இல்லை. றால், நண்டு, கணவாய் என எல்லாமே அகப்படும். அது மட்டுமல்ல, அவற்றின் குஞ்சுகளைக் கூட அந்த வலைகள் அப்படியே வாரித் துடைத்து எடுத்துச் சென்று விடும். இதனால் எதிர்காலக் கடல் வளமே முழுமையாகப் பாதிக்கப்படுகின்றது.

அத்துமீறும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுடும் சம்பவங்களும், அதனால் அவர்களில் சிலர் இறக்கும் வேதனையான சம்பவங்களும் கடந்த காலங்களில் நிகழ்ந்து வந்துள்ளன. உண்மையில் இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினைதான். அதே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான இலங்கை மீனவர்களின், குறிப்பாக வடக்கில் வாழும் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

அத்துமீறும் இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படை சுடுவது ஒரு தீர்வல்ல. அத்துடன் அது ஒரு மனிதாபிமானச் செயலும் அல்ல. ஆனால் அவர்களைச் சுடுவதில் தவறில்லை என இலங்கையின் இன்றைய ஜனாதிபதியும், 2015 இல் இலங்கையின் பிரதமராக இருந்தவருமான ரணில் விக்கிரமசிங்க அன்றைய காலகட்டத்தில் தமிழ்நாட்டின் தந்தி தொலைக்காட்சிக்கு வழங்கிய ஒரு பேட்டியில் அப்பட்டமாகவே தெரிவித்திருக்கிறார்.

அவர் அந்தப் போட்டியின் போது அத்துமீறும் இந்திய மீனவர்களைச் சுடுவதை நியாயப்படுத்துவதற்காக பின்வருமாறு கூறியிருக்கிறார்: “சிலர் எனது வீட்டை உடைக்க முயன்றால் நான் அவர்களைச் சுடுவேன். அதனால் அவர்கள் இறக்கக்கூடும். ஆனால் சட்டம் அதை அனுமதிக்கிறது”. (ஆனால் இதே ரணில் விக்கிமசிங்கவின் கொழும்பிலுள்ள வீட்டை ‘அரகலய’ கலகக்காரர்கள் 2022 இல் தீமிட்டுக் கொளுத்திய போது அவரால் ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விட்டது)

*1976* இல் கடல் எல்லை சம்பந்தமாக இலங்கையும் இந்தியாவும் செய்து கொண்ட உடன்படிக்கையில், இந்திய மீனவர்களோ அவர்களது மீன்பிடி படகுகளோ இலங்கைக் கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபட முடியாது என தெளிவாக வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. இருந்தும் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக இலங்கை – இந்திய அரசுகளுக்கிடையிலும், இரு நாட்டு மீனவர் அமைப்புகளுக்கிடையிலும், பல்லாண்டுகளாக பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன. ஆனால் தீர்வை நோக்கி ஓர் அடி தானும் இதுவரை நகர முடியவில்லை.

இப்பொழுது இந்தியத் தரப்பு புதிதாக நடைபெற முடியாத ஆலோசனை ஒன்றை இலங்கையிடம் முன் வைத்துள்ளது. அதாவது, இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பினுள் வந்து மீன் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்பதே அந்த ஆலோசனை. அத்துமீறியே இவ்வளவு செய்பவர்கள், முழு அனுமதி கொடுத்துவிட்டால் என்னென்ன செய்வார்கள்? திமிங்கிலம் குஞ்சு மீன்களை விழுங்கிய கதையாகத்தான் இருக்கும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு துப்பாக்கிச் சூடு பரிகாரமல்ல. இலங்கை மீனவர்களின் உரிமையை விட்டுக் கொடுக்காத ஒரு தீர்வைப் பேச்சுவார்த்தை மூலம் அடைவதே ஒரேயொரு வழியாகும். அதற்கான பொறுப்பு இந்தியத் தரப்பிலேயே இருக்கிறது.

ஆனால் ஏறத்தாழ இதே அளவு காலமாக தீர்வு காணப்பட முடியாமல் எப்படி இந்திய – சீன எல்லைப் பிரச்சினை இழுபடுகிறதோ, அதேபோல இந்திய மீனவர்களின் இந்த அத்துமீறல் பிரச்சினையும் தீர்வதற்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. காரணம், இந்தப் பிரச்சினையில் இரு நாட்டு மக்களினதும் நலன்கள் மட்டுமின்றி, இரு நாடுகளின் அரசியல் நலன்களும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.


# மார்க்சியம் ஓர் உலகளாவிய உண்மை

**மா**ர்க்சியம் என்பது இயக்கவியல் மற்றும் வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எனும் விஞ்ஞான பூர்வமான ஆய்வு முறையை குறிக்கிறது. பூமி உருண்டை என்பது ஏற்கனவே இருந்த உண்மையை கண்டறிந்து சொன்ன அறிவியலாகும். இது நாட்டுக்கு நாடு மாறுவதில்லை. அதைப் போன்றதுதான் மார்க்சிய விஞ்ஞானம். அது ஏற்கனவே இயங்கும் சமூக வளர்ச்சி விதிகளை ஆராயந்து சொல்கின்றது.

சமூகத்தின் வளர்ச்சி விதிகளை ஆராய்வது (புற நிலை அம்சம்); அதற்கேற்ற கட்சி திட்டம் யுத்த தந்திரம், செயல் தந்திரங்களை வகுப்பது (அக நிலை அம்சம்); எனும் இரு பணிகளை உள்ளடக்கியதுதாம் மார்க்சியம்.

புற நிலை அம்சம் என்பது சமூகத்தின் பொருளாதார அம்சங்களை (எந்த உற்பத்தி முறை என்பதை) ஆய்வு செய்வதாகும். அதாவது ஒரு நாடு எந்த உற்பத்தி முறையை கடந்து கொண்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்வதாகும். அது நமது சித்தத்திற்கு அப்பாற்பட்டது. அது ஏற்கனவே புற நிலையில் இயங்கி கொண்டிருப்பது. அதை நாம் தீர்மானிக்க இயலாது. கட்சியின் பணி அந்த வளர்ச்சிக் கட்டம் எது என்பதை மார்க்சியத்தை கொண்டு கண்டறிவதே ஆகும். மார்க்சியத்தை தவறாக பிரயோகித்தால் தவறான முடிவுகளுக்கு சென்று தோல்வியடைய நேரிடுகிறது. ஆக, பிரச்சினை மார்க்சியத்தில் இல்லை. அதை பிரயோகிக்கும் கட்சியிடமே உள்ளது.

மார்க்சின் ஆய்வு முறை ரஷ்யாவிற்கு பொருந்தாது எனும் திரிபுவாதிகளின் யூகங்களை உடைத்தெறிந்து லெனின் மார்க்சிய ஆய்வு முறையின் மூலம் ரஷ்ய புரட்சிக்கு வழி காட்டினார்.



வெற்றி பெற்றார். லெனினின் ஆய்வு முறை ஆசியாவிற்கு பொருந்தாது என்ற கருத்தை மாவோவும் ஹோசிமினும் பொய் என நிரூபித்துக் காட்டினர். மாவோ சீனப் புரட்சிக்கு லெனினியம்தான் வழி காட்டியது என்றார். ரஷ்யப் புரட்சிக்கும்

**தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...**

# போர் என்பது வெறும் மோதல் அல்ல, போர் என்பது கொள்ளை இலாபம்

ரஷ்யா – உக்ரைன் போர் ஏதேனும் ஒருவரின் தோல்வியில் முடிய வேண்டும் அல்லது ராஜீய ரீதியான அமைதித் தீர்வின்படி முடிவுக்கு வர வேண்டும். ரஷ்யா ஒரு மிகப் பெரிய, வலுவான அணு சக்தி நாடு. உக்ரைன், மிகப் பெரிய அளவிற்கு மேற்கத்திய நாடுகளின் ஆதரவோடு போரில் முன்னிறுத்தப்பட்டிருக்கும் நாடு. ஒருவரை வீழ்த்தி ஒருவர் வெற்றி பெறுவது எளிதாக நடக்கும் என்று தோன்றவில்லை. மாறாக, ராஜீய ரீதியான தீர்வுக்கு செல்வதே ஒரே வழி. போர் நீடிக்க நீடிக்க, அது சுழல் ஏணி போல மேலே மேலே சென்று இரு தரப்பையும் ஒரு கூட்டுத் தற்கொலை என்ற இடத்திற்கே இட்டுச் செல்லும் அபாயம் உள்ளது.

இந்தப் போர் நீடிக்க வேண்டுமென்று அமெரிக்கா விரும்புகிறது. அதன் நோக்கம், ரஷ்யாவை முற்றிலும் பலவீனமடைந்த நாடாக மாற்றுவதே. இதை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லொய்டு ஒஸ்ரின் (Lloyd Austin) உட்பட உயரதிகாரிகள் பகிரங்கமாகவே சொல்லி வருகின்றார்கள். அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய கூட்டாளிகளும் ரஷ்யாவை பலவீனப்படுத்தும் கொள்கையில் சேர்ந்து நிற்கிறார்கள்.

**உக்ரைன் திட்டங்கள் தோல்வி**

ஆனால், உலகின் பிற அனைத்து நாடுகளும் இந்தப் போருக்கு ராஜீய ரீதியான தீர்வு காணுமாறு ஒரே கருத்தாக கூறி வருகின்றன. போர் நீடித்தால் முதல் பெரும் சேதம் உக்ரைனுக்குத்தான் என்பதை இந்நாடுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஏற்கெனவே உக்ரைன் தனது பல்லாயிரக்கணக்கான வீரர்களை இப்போரில் இழந்து விட்டது. மிகக் கடுமையான பொருளாதாரச் சிதைவைச் சந்தித்துள்ளது. ரஷ்யாவைச் சுற்றி வளைத்து தாக்கி விட முடியும் என்ற உக்ரைனின் திட்டங்கள் தோல்வியடைந்து விட்டன. உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலன்ஸ்கியின் (Volodymyr Zelensky) தனி பாதுகாப்புப் படையிலிருந்து கூட பலர் வெளியேறி விட்டார்கள்.



Vijay Prashad Noam Chomsky

**ஈராக், லிபியா போன்று இல்லை**

உக்ரைனில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற போதிலும், அது இந்த உலகின் பல பகுதிகளில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் கூட்டணிப் படையினர் நடத்திய மிக மிகக் கொடிய யுத்தத்தினைப் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை என்பதை நாங்கள் கவனிக்க வேண்டும். 2003 இல் ஈராக் மீது அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் நடத்திய யுத்தம், 2011 இல் லிபியா மீது நடத்திய யுத்தம் போன்றவற்றில் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் படைகள் அந்த நாடுகளின் அடிப்படைக் கட்டமைப்பையே குண்டு வீசித்தகர்த்தன. எண்ணெய் வளக் கட்டமைப்புகளை அழித்தொழித்தன. ஒட்டுமொத்த போக்குவரத்தையும் சிதைத்து அழித்தன. தொலைத் தொடர்பு அமைப்பு முறையை முற்றாக சிதைத்தன. சுருக்கமாகச் சொன்னால், சமூகம் முற்றிலும் ஸ்தம்பிக்கச் செய்தன. இவற்றில் எதுவும் உக்ரைனில் இதுவரையில் நடக்கவில்லை.

ஈராக்கிலும், லிபியாவிலும் பயன்படுத்தப்பட்டது போல யுரேனியமும், வெள்ளை பொஸ்பரசும் கலந்த குண்டுகள் வீசப்படவில்லை. சட்டப்பூர்வமான வழியிலோ அல்லது சட்டப்பூர்வமற்ற வழியிலோ உக்ரைன் மீது ரஷ்யா இத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்தவில்லை. அதுமட்டுமல்ல, ஈராக்கில் அமெரிக்காவும் பிரிட்டனும் தாக்குதல் நடத்திய போது, அவர்கள் உட்பட எந்த ஒரு மேற்கத்திய நாட்டின் தலைவரும், பாக்தாத்திற்கு பயணம் மேற்கொள்ளவில்லை. ஆனால் உக்ரைனுக்கு இடைவிடாமல் மேற்கத்திய தலைவர்கள் சென்றவண்ணம் இருக்கிறார்கள். இந்த இரட்டை வேடத்தை பகிரங்கமாகவே அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**உலகம் முழுவதும் பாதிப்பு**

இந்தப் போரின் கசப்பான விளைவுகள் உக்ரைன் மற்றும் ரஷ்யாவோடு நின்று விடப்போவதில்லை. உலகின் பல பகுதிகளில் பல இலட்சக்கணக்கான மக்கள் உணவு தானியம் வந்து சேராமல் பட்டினியின் பிடியில் சிக்கியிருக்கிறார்கள். வளம் மிகுந்த கருங்கடல் பிரதேசத்திலிருந்து உணவு தானியங்களும், உரங்களும் பிற நாடுகளுக்கு விநியோகம் ஆகாமல் நிற்கின்றன. இதுதான் சமயம் என்று உலக உணவுக் கட்டமைப்புக்குள் புகுந்து வெகு சில பன்னாட்டு கோர்ப்பரேட் நிறுவனங்கள் உணவு விலைகளை உயர்த்தி கொள்ளை இலாபம் அடித்து வருகின்றனர்.

இந்த பின்னணியில் 2022 ஜூலையில் உக்ரைன், ரஷ்யா, துருக்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவை நான்கு மாத காலத்திற்கு “கருங்கடல் உணவு தானிய முன் முயற்சி” எனும்

ஒப்பந்தத்தை மேற்கொண்டு, 2 கோடி தொன் உணவு தானியங்களை இந்தப் பிரதேசத்திலிருந்து உலக நாடுகளுக்கு செல்ல வழி செய்தன. அது மேலும் சில மாதங்கள், பின்னர் சில் மாதங்கள் என நீடிக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த ஒப்பந்தம் தற்காலிமாகக் கைவிடப்பட்டுள்ளது. போர் நீடிக்கும் நிலையில் இந்த ஒப்பந்தம் என்னாகும் என்று தெரியவில்லை.

ரஷ்யா – உக்ரைன் போருக்கு முன்பே மனிதகுலம் ஒரு மிகப் பெரிய காலநிலைப் பேரழிவில் சிக்கும் அபாயத்தை எதிர் கொண்டிருந்தது. 2002 இல் வெகுரக ஏவுகணை எதிர்ப்பு ஒப்பந்தத்திலிருந்து தன்னிச்சையாக முறித்துக்கொண்டு அமெரிக்கா வெளியேறியது. 2019 இல் கையெழுத்தான அணுசக்தி நாடுகளின் இடைக்கால ஒப்பந்தம், 2020 இல் விண்வெளியை தங்களுக்குள் பிரித்துக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஆகியவற்றை அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளும் மேற்கொண்டதன் விளைவாக மனிதகுலத்தில் மிகப் பெரிய அழித்தொழிப்பு வேலையை அவர்கள் ஏற்கெனவே தொடங்கிவிட்டார்கள்.

இந்தப் பின்னணியில், தெற்கு சீனக் கடல் மற்றும் உக்ரைன் போர் ஆகிய இரண்டு பிரச்சனைகளை மையப்படுத்தி உலகளாவிய முறையில் பதற்றத்தை தூண்டிவிடுவது இவர்களுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கே. சுற்றுச்சூழல் பேரழிவைத் தடுத்து நிறுத்த கால நிலை மாற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தங்கள், உடனடியாகவே நீர்த்துப் போகச் செய்யப்பட்டுள்ளன. எனவே அந்த ஒப்பந்தங்கள் மனிதகுலத்திற்கு எந்த நம்பிக்கையையும், உறுதியையும் அளிக்கவில்லை.

**பகடைக்காயாக உக்ரைன்**

உக்ரைனை பகடைக்காயாக வைத்து அமெரிக்காவும், பிரிட்டனும் கூட்டாளிகளும் சூதாடுகின்றன என்பதை யாரும் விவாதிப்பதற்கு தயாராக இல்லை. அந்த சூதாட்டம் என்னவென்றால், அவர்களால் 'வெறி பிடித்த பைத்தியக்கார மனிதர்' என்று முத்திரை குத்தப்பட்டுள்ள ரஷ்ய அதிபர் புட்டின் தோல்வியைத் தழுவினால், அவர் அமைதியாக பையை தூக்கிக் கொண்டு நடையைக் கட்டிவிடுவார். அதன்பிறகு தலைநகர் கீவ் உட்பட உக்ரைனை தங்களது கைகளுக்கு கொண்டு வந்துவிடலாம் என்பதே. ஆனால், அது நடக்கக்கூடிய காரியமா? 2014 ஆம் ஆண்டிலேயே அப்போதைய நேட்டோ இராணுவக் கூட்டணியின் தலைவர் ஜென்ஸ் ஸ்ரோல்ரன்பேர்க் (Jens Stoltenberg), "நாங்கள் உக்ரைனில் நீண்ட போருக்கு தயாராகி வருகிறோம்" என்று கூறினார். அந்த நீண்ட போர் தான் இப்போது நடந்து வருகிறது. ஆனால் இதற்கான விலையை நேட்டோ கூட்டணி தரவில்லை. மாறாக, அப்பாவி உக்ரைனியர்கள் தான் தந்து கொண்டிருக்கிறார்கள். பெரும் எண்ணிக்கையில் மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள்.

ரஷ்யாவை பலவீனப்படுத்துவதற்காக மிகப் பெரிய சூதாட்டத்தில் உக்ரைனைத் தள்ளியுள்ளது அமெரிக்கா. இடைவிடாமல் ஆயுதங்களை அனுப்புகிறது. ராஜீய ரீதியான தடைகளை ரஷ்யாவுக்கு ஏற்படுத்திவிட்டால் எளிதில் வெற்றி பெற்று விடலாம் என்ற மாயத் தோற்றத்தை உருவாக்கியுள்ளது. முதலில் உக்ரைன் மக்களிடையே ரஷ்யாவுக்கு எதிரான உணர்வும் வெறியும் ஊட்டப்பட்டு இது துவங்கியது. இப்போது அவர்களே அமைதிக்கான சாத்தியக்கூறுகள் இல்லையா என்று ஏங்கும் இடத்திற்கு வந்திருக்கிறார்கள்.

**கோர்ப்பரேட்டுகளின் குதூகலம்**

போர் என்பது போர்தான். போர் என்பது ஒவ்வொருவருக்கும் பேரழிவு. அது நீடிக்க நீடிக்க பெரும் பதற்றம். ஆனால், போர் நீடிக்க நீடிக்க மிகப் பெரும் பெட்ரோலிய கோர்ப்பரேட் கம்பெனிகளின் தலைமை அலுவலகங்களில் இராணுவத் தளவாடங்கள் மற்றும் ஆயுதங்கள் உற்பத்தி செய்யும் கோர்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களின் தலைமை யகங்களில் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடுகிறது. அவர்களது வரலாற்றில் இதுவரை இல்லாத இலாபத்தால் குதூகலம் அடைந்திருக்கிறார்கள்.

உக்ரைனில் பயன்படுத்துவதற்காக அமெரிக்க இராணுவ தளவாடங்களை புதுப்பிப்பதற்காகவும், கூடுதலாக ஆயுத உற்பத்தி செய்வதற்காகவும் தனியார் கோர்ப்பரேட் ஆயுத கொம்பெனிகளுக்கு 1.2 பில்லியன் டொலர் அளவிற்கு ஒப்பந்தங்கள் அளித்திருப்பதாக 2022 ஒக்ரோபரில் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிவித்தது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து அமெரிக்காவின் மிகப் பெரிய ஆயுத கம்பெனிகளான நோர்த்ரப் குரும்மன் (Northrop Grumman) நிறுவனத்தின் பங்குகள் 40 சத வீதம் அதிகரித்தன் லொக்ஹீட் மார்ட்டின் (Lockheed Martin) நிறுவனத்தின் பங்குகள் 37 சதவீதம் அதிகரித்தன.

அதேபோல ஐரோப்பிய நாடுகளுக்கு ரஷ்யாவின் இயற்கை எரிவாயு செல்லக்கூடாது என தடை விதித்ததன் விளைவாக, மேற்கத்திய பெரும் கோர்ப்பரேட் எண்ணெய் கம்பெனிகளான செவ்ரான் (Chevron), எக்ஸ்ஸான் மோபில் (Exxon Mobil), ஷெல் (Shell), பிரிட்டிஷ் பெட்ரோலியம் (BP) மற்றும் டோட்டல் எனர்ஜிஸ் (Total Energies) போன்றவை 2022 இல் கூடுதலாக 134 பில்லியன் டொலர் இலாபம் சம்பாதித்துள்ளன. இவை இந்த போர் நீடிக்க வேண்டும் என்று விரும்புகின்றன.

**– பேராசிரியர் நோம் சாம்ஸ்கி,**
**பேராசிரியர் விஜய் பிரசாத்**

('பீப்பிள்ஸ் டெமாக்ரசி' செப்டம்பர் 24ந் திகதி ஏட்டில் இடம் பெற்றுள்ள கட்டுரையின் பகுதிகள்)

**சுருக்கம் : எஸ்.பி.ஆர்**

## ரணிலுக்கு கோத்தபாய புகழாரம்!

**இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை அடியோடு நிராகரித்து, சர்வதேச விசாரணைகளுக்கு அனுமதி இல்லை என பகிரங்கமாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பாராட்டுகின்றேன் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்திருக்கிறார்.**

இது தொடர்பில் கோத்தபாய மேலும் கூறுகையில், ஜனாதிபதிப் பதவியிலிருந்து நான் விலகியபோது புதிய ஜனாதிபதி பதவிக்கு ரணில் விக்கிரமசிங்கவைப் பரிந்துரைத்திருந்தேன்.

அதற்கமைய நாடாளுமன்றம் அவரைப் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்தது. ரணில் விக்கிரமசிங்க முதுகெலும்பு உள்ள சிறந்த தலைவர் என்பதை அவர் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் நிரூபித்துக் காட்டி வருகின்றார்.

இலங்கை இறைமையுள்ள நாடு. இங்கு வெளிச்சக்திகளின் தலையீடுகளுக்கு இடமில்லை என தெரிவித்த கோத்தபாய, நாடாளுமன்றத்தை மீறி எவரும் முடிவுகளை எடுக்க முடியாது என்றும் கூறினார்.

அதோடு நாடாளுமன்றத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டு வருகின்றார். உண்மையில் அவர் சிறந்த தலைவர் எனவும் முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய தெரிவித்துள்ளார்.

# நீதிமன்றத்தில் காஸ்ரோ எழுச்சியுரையின் எழுபதாண்டுகள்



“என்னைத் தண்டியுங்கள். நான் கவலைப் படவில்லை. வரலாறு என்னை விடுதலை செய்யும்!” – என முடிவுற்ற ஃபிடெல் காஸ்ட்ரோவின் எழுச்சியுரை ஒக்ரோபர் 16ந் திகதியுடன் எழுபதாண்டுகளை நிறைவு செய்கின்றது. 1953 ஜூலை 26 அன்று ஃபிடெல் காஸ்ட்ரோவின் தலைமையில் மான்கடா இராணுவ முகாமின்மீது தாக்குதல் தொடுத்த இந்த இளைஞர்கள் படை, பின்னாளில் ‘ஜூலை 26 இயக்கம்’ என்று வரலாற்றில் பதிவானது. திட்டமிடலில் நிகழ்ந்த சில தவறுகளால், அவர்களின் முயற்சி தோல்வியுற்றது. ஆனால், அந்தத் தோல்வியுடன் புரட்சியின் வரலாறு முடிந்துவிடவில்லை!

**தாக்குதலின் பின்னணி**

1952 ஜூன் 1 அன்று கியூபாவின் (Cuba) அதிபர் தேர்தல் நடைபெறவிருந்தது. முன்பாக, மார்ச் 1 அன்று நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், இத்தேர்தலில் போட்டியிட்ட மூவரில், ஃபுல்ஜென்சியோ பாடிஸ்டா (Fulgencio Batista) மூன்றாவது இடத்தில் இருந்தது தெரிய வந்தது. பத்து நாள்களுக்குப் பிறகு, அதிகாலை 2.43 மணிக்குக் கியூபாவின் மிகப்பெரும் இராணுவத் தளமான கொலம்பியா முகாமுக்குள் நுழைந்த பாடிஸ்டா, இராணுவத்தைத் தன் பக்கம் வைத்துக்கொண்டு, அதிரடியாகத் தன் கைகளில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டார்.

சில வாரங்களுக்குப் பிறகு, 25 வயதேயான ஒரு வழக்கறிஞர் ஹவானாவின் அவசர விஷயங்களுக்கான நீதிமன்றத்தின் முன்வந்து, பாடிஸ்டாவும் அவரது கூட்டாளிகளும் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் குறிப்பிட்ட ஆறு விதிகளை மீறியுள்ளனர் என்று குற்றம்சாட்டினார். “கியூபாவில் நீதிமன்றம் இருக்கிறதென்றால், இந்த விதிமீறல்களுக்காக பாடிஸ்டா தண்டிக்கப்பட வேண்டும்” என்று வாதிட்டார்.

**வீ.பா.கணேசன்**

இரண்டாவது முறையாகச் சதிசெய்து ஆட்சியைப் பிடித்த ஓர் இராணுவ மோசடிக்காரனை எதிர்த்து, தன்னந்தனியாக இப்படிச் சவால் விட்டது யார்? வேறு யாருமில்லை, ஃபிடெல் காஸ்ட்ரோ எனும் இளம் வழக்கறிஞர்தான். சட்டத்துறையில் முனைவர் பட்டம் பெற்றிருந்த அவர், நாட்டின் சட்டத்தை அமுலாக்குங்கள் என்றுதான் நீதிமன்றத்தின் படியேறியிருந்தார். ஆனால், நீதிமன்றம் அவரது வழக்கைத் தள்ளுபடி செய்தது.

**புரட்சிப் படை**

புரட்சி மட்டுமே ஒரே வழி என்று ஃபிடெல் முடிவுசெய்தது அதன் பின்னர்தான். தோல்வியடையவே வாய்ப்பு அதிகமுள்ள இந்த முயற்சியில், கொடூரமான சித்திரவதை, மரணம் ஆகியவற்றையும் எதிர்கொள்ளத் தயாரானவர்களை மட்டுமே அணிதிரட்டி, ஆயுதப் பயிற்சி அளித்து, தேவையான ஆயுதங்களையும் திரட்டினார். இதற்கு ஓராண்டுக் காலம் ஆயிற்று. இந்தப் படையில், 26 வயதான ஃபிடெல், 22 வயதான அவரது தம்பி ராவல் காஸ்ட்ரோ (Raúl Castro) உள்ளிட்ட, 200 ஆண்களும் 2 பெண்களும் இருந்தனர்.

தாக்குதல் தோல்வியுற்ற பிறகு, போராளிகள் சிலர் அங்கேயே கொல்லப்பட்டனர். மற்றவர்கள் சிறைப் பிடிக்கப்பட்டு, மிக மோசமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர். அவர்களில் சிலர் சிறையிலேயே கொல்லப்பட்டனர். இதற்கிடையில், தப்பிச்சென்ற ஃபிடெல், ராவல் உள்ளிட்ட சிலர் சாண்டியாகோ மலைப்பகுதியில் ஒளிந்திருந்தனர்.

அவர்களைத் துரத்திச் சென்ற இராணுவமும் காவல் துறையும் நரவேட்டை ஆடின. பலர் கொல்லப்பட்டனர். இதனால் மக்களிடையே நிலவிய பதற்றத்தைக் கண்ட அப்பகுதியின் ஆர்ச் பிஷப் பெரெஸ் செரண்டாஸ், கிளர்ச்சிக்காரர்கள் சரணடைய முன்வந்தால் அவர்களைக் கொல்லக் கூடாது, நீதிமன்றத்தில் வைத்தே அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நிபந்தனையை இராணுவத் தளபதியிடம் முன்வைத்து, அதை ஒப்புக்கொள்ள வைத்தார்.

**மக்களிடம் பரவிய புரட்சி**

எனினும், ஃபிடெலை எக்காரணம் கொண்டும் உயிரோடு விட்டுவிடக் கூடாது என்பதே இராணுவ உயர் அதிகாரிகளின் இரகசிய உத்தரவு. சியெர்ரா மாஸ்த்ரா மலையடிவாரத்துக்குச் சென்ற குழுவில் இருந்த லெஃப்டினென்ட் பெட்ரோ சரியா, பல்கலைக்கழகத்தில் படித்த காலத்திலேயே ஃபிடெலை நன்கறிந்தவர். ஆனால், கூட வந்த படையினருக்கு ஃபிடெலைத் தெரியாது. அவர் ஃபிடெலிடம், “உன் பெயரைச் சொல்லிவிடாதே, சுட்டுத் தள்ளிவிடு வார்கள்” என்று இரகசியமாகச் சொல்லிவிட்டார்.

அதன்படியே, பதுங்கியிருந்த கிளர்ச்சியாளர்கள் அடையாளத்தை மாற்றிச் சரணடைந்தனர். இவ்வாறு தாக்குதல் முயற்சி தோல்வியுற்றபோதிலும், ஜூலை 26 இயக்கமும் ஃபிடெல் காஸ்ட்ரோவும் மக்களின் கவனத்தைத் தங்கள்

பக்கம் இழுக்க முடிந்தது. பாடிஸ்டாவின் கொடுங்கோன்மைக்கு எதிரான உணர்வு மக்களிடையே மெதுவாகப் பரவத் தொடங்கியது.

**வலுவாக வாதிட்ட காஸ்ட்ரோ**

நீதிமன்றம், பாடிஸ்டாவுக்கு எதிரான அடுத்த போராட்டக் களமாக மாறியது. 20 ஆண்டுகளுக்கு முன்பு ஹிட்லரின் நாசி நீதிமன்றத்தைத் தன் வாதங்களால் புரட்டிப்போட்டு அதிரவைத்த ஜோர்ஜ் டிமிட்ரோவைப் போலவே, ஃபிடெலும் இந்த நீதிமன்றத்தைத் தன் பிரச்சார மேடையாக மாற்றினார்.

1953 செப்டம்பர் 21 அன்று சாண்டியாகோ நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட 122 பேரில் பலர், மான்கடா மீதான தாக்குதலுக்குத் தொடர்பே இல்லாதவர்கள். முதல் அமர்வில், "ஏன் 'நியாயமான' வழிகளில் உங்கள் நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிக்கவில்லை?" என்று நீதிபதிகள் வினவியபோது, முன்பு அவசர விஷயங்களுக்காகத் தான் வாதாடியபோதும், நீதிமன்றம் நியாயமாகவும் சட்டப்படியும் நடந்து கொள்ளவில்லை என்பதை நினைவூட்டினார் ஃபிடெல் காஸ்ட்ரோ.

இரண்டாவது அமர்வில், வழக்கறிஞர் என்ற தகுதியில், தன் தரப்பு வழக்கறிஞர்களுடன் அமர அனுமதி கோரி, அதைப் பெற்ற ஃபிடெல் காஸ்ட்ரோ, பாடிஸ்டாவும் அவரது அதிகாரிகளும் வானொலி மூலம் கிளர்ச்சிக்காரர்கள் பற்றி நடத்திவரும் அவதூறுப் பிரச்சாரம் கைப்பற்றப்பட்ட 70 கிளர்ச்சியாளர்களைச் சற்றும் கருணையின்றிப் படுகொலை செய்தது, சிறையில் நடந்த சித்திரவதைகள் பற்றி அம்பலப்படுத்தினார்.

மூன்றாவது அமர்வின்போது அவர் இல்லை. "அவருக்கு உடல்நலமில்லை. முழுமையான ஓய்வு தேவைப்படுகிறது" என்று சிறை அதிகாரிகள் தெரிவித்தனர். பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் இரண்டு மருத்துவர்களை அனுப்பி, கைதியைச் சோதித்துவிட்டு, 'விசாரணையில் பங்கெடுக்கும் நிலையில் அவர் இல்லை' என்ற சான்றிதழையும் பெற்று அரசு நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது.

இதையடுத்து, அவர் வர இயலாதபோதும், வழக்கு விசாரணை தொடரும் என்று தலைமை நீதிபதி அறிவித்தபோது, "அவருக்கு உடல்நலம் நன்றாகத்தான் இருக்கிறது!" என்று குரல் எழுந்தது. அந்தக் குரலுக்குரியவர் இரண்டு பெண் கிளர்ச்சியாளர்களில் ஒருவரான டாக்டர் மெல்பா ஹெர்னாண்டஸ். ஃபிடெல் தன் கைப்பட எழுதிய கடிதத்தை அவர் கொடுத்தார்.

நீதிபதிகள் செப்டம்பர் 27 அன்று இரண்டு மருத்துவர்களை அனுப்பி, சிறையில் ஃபிடெலைச் சந்தித்து, சோதித்து, அவர் உடல் நலத்துடனேயே இருக்கிறார் என்று சான்றளித்தபோது, அவரை விசாரணைக்கு அழைத்துவர வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டபோதிலும், பாடிஸ்டாவின் கொடுங்கோலாட்சி அதைச் செய்யவில்லை.

நீதிபதிகளின் தொடர்ச்சியான வற்புறுத்தலுக்குப் பிறகு, ஒக்ரோபர் 16ந் திகதி அன்று நீதிபதிகளின் முன் ஃபிடெல் காஸ்ட்ரோ நிறுத்தப்பட்டார். ஆனால் நீதிமன்றத்தில் அல்ல. அரசு மருத்துவமனை செவிலியர்களின் ஓய்வறைதான் விசாரணை மையமாக மாறியிருந்தது. கியூபா மக்கள் ஃபிடெலின் குரலைக் கேட்கக் கூடாது என்ற நோக்கத்தோடு, மூன்று நீதிபதிகள், இரண்டு அரசு வழக்கறிஞர்கள், (எதையும் பிரசுரிக்கக் கூடாது என்ற நிபந்தனையுடன்) ஆறு பத்திரிகையாளர்கள், சுமார் 100 இராணுவ வீரர்கள் அந்த அறையில் சூழ்ந்திருக்க, ஃபிடெல் நீதிமன்றத்தை எதிர்கொண்டார்.

எவ்விதக் குறிப்புகளும் இன்றி, ஐந்து மணி நேரம் கிளர்ச்சியின் நோக்கத்தை விரிவாக விளக்கினார். அவரது உரை, கருணை காட்டுமாறு அரசைக் கெஞ்சவில்லை. மாறாக, கொடுங்கோலாட்சியின் மீதான குற்றச்சாட்டுப் பட்டியலாகத்தான் இருந்தது. யாரோடும் பேச முடியாமல், தனிமைச் சிறையில் 76 நாள்கள் அடைக்கப்பட்டிருந்த இந்த நாள்களில், தன் 27வது வயதை நிறைவு செய்திருந்த ஃபிடெல் அப்போது கூறிய, "வரலாறு என்னை விடுதலை செய்யும்!" என்கிற அந்த முத்தாய்ப்பான சொற்றொடர் இன்றளவும் வரலாற்றில் உண்மையென நிலைத்து நிற்கின்றது.

**5ம் பக்கத்தொடர்ச்சி...**

இந்த அறிக்கையின்படி, உலக அளவில் குறைந்த எடை உடைய குழந்தைகளின் விகிதம் இந்தியாவில் 18.7 விழுக்காடாக உள்ளது. இது கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டை பிரதி பலிக்கிறது. பொதுவாக 15 விழுக்காட்டிற்கு மேல் உள்ள நாடுகள் மிகவும் கவலைக்குரியதாக உள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 'மிக அதிகம்' என்ற பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள ஒரே நாடு இந்தியா மட்டுமே.

இந்தியாவில் 35விழுக்காட்டிற்கும் அதிகமான குழந்தைகள் வளர்ச்சி குன்றியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் சுமார் 16.6 விழுக்காட்டினர் ஊட்டச்சத்து குறைபாடுகளுடன் உள்ளனர். ஐந்து வயதை எட்டுவதற்குள் இறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 3.1 விழுக்காடாக உள்ளது.

15 முதல் 24 வயதுடைய பெண்களில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது உலகில் உள்ள மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது மிக மிக அதிக அளவாகும். கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள், வயிற்றுப்போக்கு, நிமோனியா மற்றும் மலேரியா போன்ற குழந்தை பருவ நோய்களால் இறப்பதற்கான அதிக ஆபத்து உள்ளது. 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்புகளில் சுமார் 45 விழுக்காடு ஊட்டச்சத்து தொடர்பானவை என்று உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.


வழக்கம் போல் இந்த அறிக்கையையும் மோடி அரசு நிராகரித்துள்ளது. சர்வதேச அமைப்புகளின் தரவுகளை மட்டுமல்ல தனது நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தேசிய புள்ளியியல் அமைப்பின் தரவுகளையும் ஏற்க மறுத்து அதிகாரிகளை பந்தாடிய ஓர் அரசாங்கம், இந்த அறிக்கையை நிராகரித்திருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

---

*மூலதனம் என்பது பணம். மூலதனம் என்பது பொருட்கள். அதன் மதிப்பு காரணமாக, அது தனக்குத்தானே மதிப்பைச் சேர்க்கும் அசாத்தியத் திறனைப் பெற்றுள்ளது. இது மேலும் மேலும் குட்டி போடுகிறது. அல்லது, குறைந்தபட்சம், தங்க முட்டைகளை இடுகிறது.*

***-கார்ல் மார்க்ஸ்***

# பலஸ்தீனம் அழிக்கப்பட்டு இஸ்ரேல் உருவானது எப்படி?




இன்றைய இஸ்ரேல் உருவானதில் மிக முக்கிய பங்கு வகிப்பது, 'பெல்ஃபோர் பிரகடனம்' (Balfour Declaration). பிரித்தானியா அரசு எவ்வாறு பலஸ்தீன அரேபியர்களுக்கு துரோகம் இழைத்தது என்பதை அறிந்து கொள்ள பெல்பேர் பற்றி அறிந்து கொள்ளவேண்டும். 2017 இல் அந்த பிரகடனத்தின் நூற்றாண்டு விழாவை பிரிட்டன் அரசு இலண்டனில் கொண்டாடியது. உலகம் முழுவதுமுள்ள அரேபியர்கள் அந்த நாளை தங்களின் உரிமையை, அடிப்படை வாழும் உரிமையையே பறித்த நாளாகப் பார்க்கிறார்கள்.

**முதலாவது உலகப் போர் (1914–18)**

முதல் உலக யுத்தத்தில் பிரித்தானியா தலைமையில் நேச நாடுகளும், துருக்கியின் ஓட்டோமான் காலிஃபட் (Ottoman Caliphate), ஜெர்மனி ஆகிய அச்சு மைய அதிகார நாடுகள் எதிர் அணியிலுமிருந்து சண்டையிட்டன. 4 ஆண்டுகள் நடைபெற்ற யுத்தத்தில் 85 இலட்சம் வீரர்கள் இரண்டு பக்கமும் மடிந்தனர். 70 இலட்சம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். யுத்தம் ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில் நடைபெற்றது.

**யூதர்களைக் கவர...**

1914 இல் யுத்தம் தொடங்கப்பட்ட போது, தங்களுக்கு வலு சேர்க்க, யூதர்களின் ஆதரவு தேவை என பிரித்தானியாவின் 'யுத்த அமைச்சரவை' (War cabinet) முடிவு செய்தது. காரணம் அவர்களிடமிருந்த செல்வம். அதன்படி அன்றைய பிரித்தானியா பிரதமர் அஸ்குயுத் (H. H. Asquith), பலஸ்தீனம் உட்பட ஓட்டோமான் பேரரசின் பகுதிகளைக் கைப்பற்றுவது பற்றி ஆராய ஒரு குழு அமைத்தார். அந்தக்குழு 1916 இல் அறிக்கை சமர்பித்த போது, பிரித்தானியா பிரதமராக இருந்தவர் டேவிட் லொயிட் ஜோர்ஜ் (David Lloyd George). அவரது எண்ணம் ஓட்டோமான் பேரரசை பல துண்டுகளாக்க வேண்டும் என்பதாகும் (தற்போது உக்ரைன் போரில் அமெரிக்காவின் நோக்கமான, ரஷ்யாவை பல துண்டுகளாக ஆக்குவது போன்று).

இதற்கிடையில் 1917 இல் காசா பகுதியில் ஜெருசலேம் பகுதியை ஓட்டோமன் படைகளிடமிருந்து கைப்பற்ற 6 மாதங்களுக்கு மேல் கடும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தொடர்ந்து இழுபறி நிலை. இந்த நிலையில் உலகம் முழுவதுமுள்ள யூதர்களின் ஆதரவை தங்களுக்கு சாதகமாகத் திரட்ட பிரித்தானியா திட்டமிட்டது. அன்றைய தினம் யூதர்கள் பெரும்பாலும் கந்துவட்டி, வங்கி மற்றும் நிதித்துறை ஆகியவற்றை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

**பிரித்தானியா அமைச்சரவையில் விவாதம்**

1917 ஒக்ரோபர் 31 இல், பிரிட்டன் அமைச்சரவையில் இப்பிரச்சனை விவாதிக்கப்பட்டது. அதில் 'யூதர்களுக்கு நாடு' என்று ஓர் அறிக்கை வெளியிடுவது, அதனை பிரச்சாரம் செய்வது, அதன் மூலம் நேச நாடுகளின் போர் முயற்சிகளுக்கு யூதர்களின் ஆதரவைத் திரட்டுவது என்று முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் பலஸ்தீனத்தை பிரிப்பது பற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பலஸ்தீனர்களுக்கு நிரந்தர துயரம் தந்த 67 வார்த்தைகள்**

ஓர் ஏகாதிபத்திய நாடு முதன் முதலாக யூத இனவாதக் குறிக்கோள்களை பிரதிபலித்தது. இந்த தீர்மானத்தில்தான் பழைய விவிலியத்தில் உள்ளது போல் 'யூதர்களுக்கு ஒரு தாய்நாடு வேண்டும்' என நிறைவேற்றப்பட்டது. 1917 இல் பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சராக இருந்தவர் ஆர்தர் பெல்பேர் (Arthur Balfour). அவர் இங்கிலாந்தில் யூதர்களின் மதிப்பு மிக்க தலைவராக இருந்த வோல்டர் ரோத்சைல்ட் (Walter Rothschild) பிரபுவுக்கு 1917 நவம்பர் 2ந் திகதி எழுதிய கடிதத்தில், யூதர்களுக்கு தாயகம் அமைப்பதற்கான அமைச்சரவையின் தீர்மானம் இணைக்கப்பட்டிருந்தது.

ஆங்கிலத்தில் மொத்தம் 67 வார்த்தைகள் கொண்ட அந்த கடிதத்தின் முதல் வரியில் "மேன்மை தங்கிய மன்னரின் அரசு, பாலஸ்தீனத்தில் யூத மக்களுக்கு ஒரு தாயகம் உருவாக்குவதற்கு சாதகமான எண்ணம் கொண்டுள்ளது. அந்த குறிக்கோளை நனவாக்கிட தன்னிடமுள்ள அனைத்து முயற்சிகளையும் பிரித்தானியா பயன்படுத்திடும் (His Majesty's Government view with favour the establishment in Palestine of a national home for the Jewish people, and will use their best endeavours to facilitate the achievement of this object)" என்று தொடங்கியது.

க.ஆனந்தன்

இதுவே இஸ்ரேல் உருவாகிய ஆரம்பப்புள்ளி. உலகின் பெரும்பான்மையோரின் பொதுப்புத்தியில் பதிவாகியிருப்பது போன்று, ஜெர்மனியின் ஹிட்லர் யூதர்களைக் கொன்று குவித்ததால், ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தின் அடிப்படையில் உருவான நாடல்ல, இஸ்ரேல் அதற்கு 31 ஆண்டுகளுக்கு முன்பே, பிரித்தானியாவின் 'இராஜதந்திரத்தின்' – அதாவது சூழ்ச்சியின் விளைவாக உருவாக்கப்பட்டது.

**பலஸ்தீனர்களுக்கு பொய் உறுதிமொழி**

அந்தக் கடிதத்தின் பின்பகுதியில், இவ்வாறு தாயகத்தை உருவாக்க இரண்டு நிபந்தனைகளை அந்த தீர்மானம் தெரிவிக்கிறது. அதில் முதல் நிபந்தனை, பலஸ்தீன மக்களின் நலன் சம்பந்தப்பட்டது. அது 100 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கத்திய நாடுகள் குப்பைத் தொட்டியில் எறிந்த

வாக்குறுதியாகும். "மிகத் தெளிவாக புரிந்து கொள்ளப்பட்டது என்னவெனில், பலஸ்தீனத்தில் தற்போதுள்ள யூதர்கள் அல்லாத சமூகங்களுக்கு ஏற்கனவேயுள்ள குடிமை மற்றும் மத உரிமைகளுக்கு முரணாக எந்த செயலும் மேற்கொள்ளப்பட மாட்டாது (It being clearly understood that nothing slall be done which may preju dice the civil and religious rights of existing non-Jewish communitids in Palestine)".

இரண்டாவது நிபந்தனை, "இஸ்ரேல் உருவாகும்கும்வரை யூதர்கள் அவரவர் வாழும் நாடுகளில் அவர்களின் குடிமை மற்றும் மத உரிமைகள் பாதுகாக்கப்படும்" என்பது. முதல் நிபந்தனையான பலஸ்தீனத்தில் வாழ்ந்த அரேபியர்களின் குடிமை மற்றும் மத உரிமைகள் மட்டும் 1948 முதல் 2023 வரை இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவால் உதாசீனப்படுத்தப்படுகின்றன.

**பிரித்தானியாவின் துரோகங்கள்**

பலஸ்தீன மக்களின் குடிமை மற்றும் மத உரிமைகளை பாதிக்கும் எந்த முடிவையும் எடுக்கமாட்டோம் என்ற நிபந்தனையை பிரித்தானியா கைவிட்டுவிட்டது. மெக்காவின் ஷெரீப்பாக இருந்த ஹூசைன் பின் அலி (Hussein bin Ali), முதல் உலகப் போரில், ஓட்டோமான் பேரரசை வீழ்த்த உதவியவர். அதற்கு கைமாறாக முழு அரபுப் பிரதேசத்தையும் தனி சுதந்திர நாடாக மாற்றுவோம் என பிரித்தானியா வாக்குறுதி அளித்திருந்தது. பெல்ஃபோர் பிரகடனத்தை ஹூசைன் கடுமையாக எதிர்த்ததால், அவரை சவூதி அரேபிய சுல்தானைக் கொண்டு கொன்றது பிரித்தானியா.

**1917 இல் பலஸ்தீன மக்களின் எழுச்சி**

பலஸ்தீனத்தில் அன்று வாழ்ந்த மக்களில் 90% இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களுமான அரேபியர்கள். அன்றைய பலஸ்தீனத்தில் வெறும் 8% யூதர்கள். பெல்ஃபோர் பிரகடனம் வெளியிடப்பட்டவுடன் பலஸ்தீனப் பகுதியில் பெரும் கலவரம் வெடித்தது. அதனைத் தொடர்ந்து 1919 இல் அமைக்கப்பட்ட கிங்–கிரேன் கமிஷன், இராணுவ பலத்தினால் அல்லாமல் இதனை அமுல்படுத்த சாத்தியமே இல்லை என்ற கருத்தை அனைத்து பிரித்தானிய அதிகாரிகளும் கொண்டுள்ளனர் என்று தெரிவித்தது. 1936 இல் பிரித்தானியா அரசு மீண்டும் பலஸ்தீனத்தில் வாழ்ந்த அராபியர்களின் சொத்துரிமை மற்றும் மத உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று வாக்குறுதிஅளித்தது. ஆனால் நடைமுறையில் கைவிட்டது.

**முதல் உலகப் போருக்குப் பின்**

முதல் உலகப் போரில் நேச நாடுகள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பலஸ்தீனப் பகுதியின் நிர்வாகத்தை பிரித்தானியாவிடம் நேச நாடுகள் அளித்தன. அந்த போர் நிறுத்த ஒப்பந்தங்களில் பெல்ஃபோர் பிரகடனத்தை இணைத்ததன் வாயிலாக அது அமுலாக்கப்பட வேண்டிய சர்வதேச சட்டமாக (International obligation) மாறியது. போருக்குப் பின் உலகம் முழுவதிலிருந்தும் யூதர்களை பிரித்தானியா பலஸ்தீனப் பகுதிகளில் குடியமர்த்தியது. யூதர்கள் தங்களுக்கென்று இராணுவம் அமைத்து பலஸ்தீனர்களை தாக்கினர். பிரித்தானியா அதைக் கண்டு கொள்ளவில்லை.

**1948 இல் இன அழிப்பு**

1948 மே 14 அன்று பிரித்தானியா பலஸ்தீனத்தை விட்டு வெளியேறியவுடன், இராணுவத்தை கொண்டிருந்த யூதர்கள், அமெரிக்க உதவியுடன், பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியைக் கைப்பற்றினர். சுமார் 15000 பாலஸ்தீன அரேபியர்கள் கொல்லப்பட்டனர். மிகப் பெரிய அளவில் இனஒழிப்பு நடவடிக்கைகள் பலஸ்தீன அரேபியர்களுக்கு எதிராக நடத்தப்பட்டது. 7 இலட்சம் பலஸ்தீனர்கள் தங்கள் மூதாதையர் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர். ஆயிரக்கணக்கான பலஸ்தீன கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவையனைத்தும் அமெரிக்க ஆதரவுடன் நடைபெற்றன. அதே தினத்தில் யூதர்கள் "இஸ்ரேல்" என்ற நாட்டை அறிவித்தனர். அனைத்து ஆவணங்களிலும் இருந்த 'பலஸ்தீனம்' என்ற பெயரை அழித்தனர். இந்த தினத்தை பலஸ்தீனர்கள் "அல்–நக்பா" (Al Nakba) என்றழைக்கின்றனர். நக்பா என்றால் பேரழிவு என்று அர்த்தம்.

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

சீனப்புரட்சிக்கும் யுத்த தந்திரம், செயல் தந்திரங்களில்தாம் வேறுபாடு ஏற்பட்டது. தத்துவம் ஒன்றே. மார்க்சியம் ஆசியாவிற்கும் பொருந்தும் உண்மைதான் என மாவோ நிரூபித்தார்.

எங்கு தவறு நடக்கின்றது? மார்க்சியத்தை பிரயோகிக்கும் கட்சியிடம்தான் தவறு ஏற்படுகின்றது. உதாரணமாக, மூன்றாம் அகிலத்தில் காலனிய ஆய்வுரைகள் மீதான வாதத்தில் இந்தியாவின் பிரதிநிதி எம்.என் ராய் என்ன சொன்னார்? காலனியாதிக்கமே இந்தியாவில் முதலாளித்துவ வளர்ச்சியை கொண்டு வரும் என்றார். அதை லெனின் நிராகரித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேச விடுதலைக்கு தான் முன் நின்று தலைமை தாங்காமல் காங்கிரசின் பின்னால் சென்றது. காலனியாதிக்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும் காங்கிரஸ் கட்சியை தரகு முதலாளித்துவ கட்சி என வரையறுக்காமல் அக்கட்சியை தேசிய முதலாளித்துவ கட்சி என வரையறுத்தது. இந்த தவறு கட்சியின் தவறே ஒழிய மார்க்சியத்தின் தவறல்ல. மார்க்சியம் காங்கிரஸ் கட்சியை தரகு முதலாளித்துவ கட்சி என்றே வரையறுக்கிறது.

ஆகவே புற நிலையில் இயங்கும் வளர்ச்சி விதிகளை கண்டறிய பயன்படுவதால்தான் மார்க்சியம் உலகு தழுவிய உண்மையாக உள்ளது. எங்கெல்ஸ் சொல்வது போல் மார்க்சியம் விஞ்ஞானங்களின் விஞ்ஞானமாக உள்ளது. எனவே மார்க்சியத்தை மேம்படுத்துவது / இட்டு நிரப்புவது என்பது தவறான வாதம். பிரச்சினை அதை பிரயோகிப்பதில்தான் உள்ளது. மேம்படுத்துவது / இட்டு நிரப்புவது என்றால் அதற்கு மேலான விஞ்ஞான ஆய்வு முறையை முன் மொழிய வேண்டும். மாறாக அதற்கு கீழான அல்லது அதற்கு முந்தய ஆய்வு முறைகளை (கருத்துமுதல்வாத ஆய்வுகள்) முன்மொழிவது மார்க்சியத்தின் அறிவியல் உண்மையை சிதைக்கும் முயற்சியாகவே இருக்கும்.


-சிதம்பரம்

---

*ஆதிக்க வர்க்கம், தனது ஆட்சியை நிலைநிறுத்த வன்முறை, பலவந்தம் ஆகியவற்றை மட்டும் பயன்படுத்துவதில்லை. மாறாக அந்த வர்க்கத்தின் உலகப் பார்வையை பரந்துபட்ட மக்கள் ஏற்றுக்கொண்டு, அந்த வர்க்கத்தின் மேலாண்மைக்கு அவர்கள் விருப்பத்துடன் இசைவு தருவதாலுமே அதனுடைய ஆட்சி நிலை நிறுத்தப்படுகிறது.*

**-கிராம்சி**

# அமெரிக்காவில் 18 சதவீதமான குழந்தைகள் பசியுடன் உறங்கச் செல்கிறார்கள்




அதிகளவு பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவையே உலகளாவிய பட்டினிக்கு காரணம் என வேர்ல்ட் விசன் இண்டர்நேஷனல் (World Vision International) என்ற மனிதநேய குழு, 16 நாடுகளில் அனைத்து வருமான நிலைகளிலும் உள்ள 14,000 இற்கும் மேற்பட்டவர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பு ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. ஒக்ரோபர் 16 திங்கட்கிழமை, சர்வதேச உணவு தினத்திற்கு முன்னதாக வெளியிடப்பட்ட இந்த ஆய்வு, சர்வதேச அரங்கில் முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

அந்த ஆய்வில் 59 சத வீதமான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பசி மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு குறித்து மிகவும் கவலை கொண்டுள்ளதாகவும், 46 சதவீதமானோர் ஊட்டச்சத்துள்ள உணவு வாங்க தேவையான பொருளாதார வேலைகள் கிடைப்பதில்லை எனவும் கூறியுள்ளனர். 37 சதவீத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் சரியான ஊட்டச்சத்தை கொடுக்க முடியவில்லை எனவும் 21 சதவீதமானோர் கடந்த மாதம் தங்கள் குழந்தைகள் முறையான உணவின்றி பட்டினியாக இருந்ததாகவும் கூறியுள்ளனர்.

அமெரிக்காவில் எடுக்கப்பட்ட ஆய்வில் 18 சதவீதமான மக்கள் தங்கள் குழந்தைகளில் ஒருவர் பசியுடன் தூங்கும் நிலைக்கு சென்றதாகக் கூறியுள்ளனர். மேலும் அடிப்படை ஊதியம் இல்லாத நாடுகளில் பசியுடன் படுக்கைக்குச் செல்லும் குழந்தைகளின் அளவு 38 சத வீதத்துக்கும் மேலாக அதிகரித்துள்ளது எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பசி என்பது ஒரு நாடு அல்லது உலகின் ஒரு பகுதிக்கு மட்டுமானதல்ல,அது ஒரு சர்வதேச பிரச்சனை என வேர்ல்ட் விஷன் இண்டர் நேஷனல் அமைப்பின் தலைவர் அண்ட்ரூ மொரேலி (Andrew Morley) ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். தங்கள் குழந்தைகள் பசியுடன் உறங்கச் சென்றதற்கு முக்கியக் காரணம் பணவீக்கம் மற்றும் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு ஆகியவையே என 46 சதவீதமானோரும், குறைவான குடும்ப வருமானம் என 39 சதவீத மானோரும், பசியை நீக்க அரசு போதுமான கவனம் செலுத்தாதது காரணம் என 25 சதவீதமானோரும் கூறியுள்ளனர்.

கொரோனா தொற்று மற்றும் உக்ரைன் – ரஷ்யா போரால் உலகளவில் அதிகரித்த பொருளாதார நெருக்கடி அனைத்து நாடுகளையும் பாதித்துள்ளது. பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவினங்கள் அதிகரிப்பு ஆகிய காரணத்தால் 16 நாடுகளில் 11 நாடுகளின் குழந்தைகளின் மீதான பசி மிக அதிகளவில் உள்ளது சுட்டிக் காட்டப்பட்டது. இது பங்களாதேஷில் மட்டும் 70 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆனால் வளர்ந்த நாடுகளான கனடா (68%), அவுஸ்திரேலியா (66%), பிரிட்டன் (66%) போன்ற பணக்கார நாடுகளில் அதிக குழந்தைகள் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் வறுமையில் தள்ளப்பட்டுள்ளனர் என்பது மிக முக்கியமானதாகும்.

*முதலாளித்துவத்தை அடித்து நொறுக்கி, அதன் அடித்தளத்தையே தகர்க்கும்படியான, தீர்மானகரமான தாக்குதலை தொடுப்பதற்காக பாட்டாளி வர்க்கம் ஆவேசத்துடன் தவறாமல் எழுந்தாக வேண்டும். இந்தத் தலையாயதும் தீர்மானகரமானதுமான, வழி முறைச் சாதனமே சோசலிசப் புரட்சியாகும்.*

*சோசலிசப் புரட்சியை, திடுதிப்பென்றும், ஒரே அடியில் முடிந்து விடுவதுமான ஒன்றாக எண்ணவே கூடாது. அது ஒரு நீண்டகாலப் போராட்டமாகும் அப்போராட்டம் பரந்துபட்ட பாட்டாளி மக்களால் தொடுக்கப்படுவதாகும். முதலாளித்துவத்தை தோல்வியுறச் செய்து, அதன் ஆதிக்க நிலைகளைக் கைப்பற்றுவதற்காக, போராட்டம் தொடுக்கப்படுகிறது.*

*பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி என்பது, அதே நேரத்தில், தோற்கடிக்கப்பட்ட முதலாளிகளின் மீதான ஆதிக்கம் என்று பொருள்படுவதால், வர்க்கங்களுக்கு இடையிலான மோதலில், ஒரு வர்க்கத்தின் தோல்வியானது பிறிதொரு வர்க்கத்தின் ஆதிக்கமாகவே அமையும் என்பதால், சோசலிசப் புரட்சியின் முதல் கட்டமானது, முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கமாக இருந்தே தீரும்.*

**-ஸ்டாலின்**

**முன்பக்கத்தொடர்ச்சி...**

சார்பு ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் 1977 இல் ஆட்சிக்கு வந்தது. இந்த அரசு 1978 இல் நடைமுறையில் இருந்த குடியரசு அரசியல் அமைப்பை நீக்கிவிட்டு, அந்த இடத்தில் புதிய அரசியல் அமைப்பு ஒன்றை அறிமுகம் செய்தது. அந்த அரசியல் அமைப்பு ஜனாதிபதி ஒருவர் தான் விரும்பிய ஏகாதிபத்திய சார்பு அரசியல் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஏற்படுத்தியது. (அந்த முறையே இன்றுவரை தொடர்கிறது) ஆனால் இந்த அரசியல் அமைப்பாலும் நாட்டின் தலையாய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியவில்லை.

முக்கியமாக, நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளையும், தேசிய இனப் பிரச்சினையையும் தீர்க்க முடியவில்லை. அதன் காரணமாக இன்றுவரை இந்த இரண்டு பிரச்சினைகளுமே நாட்டின் தலையாய பிரச்சினைகளாக இருந்து வருகின்றன.

இடையிடையே தேசியவாதக் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் ஆட்சியில் இருந்தபோது, அந்நியர் கைகளில் இருந்த பொருளாதார வளங்கள் பல தேசவுடமையாக்கப்பட்டது உண்மை என்ற போதிலும், அந்த அரசுகள் முழுமையான சுய சார்பு பொருளாதாரக் கொள்கை ஒன்றை வகுத்துச் செயல்படுத்தவில்லை. வெளிநாடுகளிடம் இருந்து கடன் பெறுவதிலும், அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதிலுமே அவை நாட்டமாக இருந்தன. இந்த நிலைமையால் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை படிப்படியாக வளர்ந்து வந்து, 2022 இல் அது உச்ச நிலையை அடைந்து, பதவியில் இருந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டிய நிலையும் ஏற்பட்டது. (இதே போன்றதொரு நிலைமை 1953 இல் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஏற்பட்டது)

இந்த நிலைமையைச் சீர்செய்வதற்காக ஏகாதிபத்திய சார்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாக இருத்தப்பட்டார். அவர் செய்ததெல்லாம், இலங்கையை ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பனவற்றிடம் கையேந்த வைத்ததுதான். அந்த நிறுவனங்கள் தமக்கு இலாபம் தரும் வகையில் கடுமையான சில நிபந்தனைகளை விதித்துவிட்டு இலங்கைக்கு கடன் வழங்க முன்வந்தன.

இதனால் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால், முன்பு அந்நிய கொம்பனிகள் நேரடியாக இலங்கையில் முதலீடு செய்து சுரண்டிக் கொண்டிருந்தன. அவற்றை நாம் அவர்களிடம் இருந்து பறித்து தேசவுடமையாக்கினோம். அதற்குப் பதிலாக நாம் நமது சொந்த தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தவறி, தொடர்ந்தும் அவர்கள் மீது பொருளாதார ரீதியாகத் தங்கியிருந்தபடியால், அவர்கள் இலங்கைக்கு பல பொருளாதார நெருக்கடிகளைக் கொடுத்து, தமக்கு ஏற்றவாறு ஆட்சி மாற்றம் செய்ததுடன், தாம் முன்பு தேசியமயத்தின் மூலம் இழந்த செல்வத்தை இப்பொழுது கடன் என்ற போர்வையில் நிதி மூலதனத்தை வழங்கியதின் மூலம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து அறவிடத் தொடங்கியுள்ளனர்.

இதன் மூலம் இடையில் சில காலம் ஓரளவு தன்னும் நமது நாடு பெற்றிருந்த அற்ப சொற்ப சுயாதீனப் பொருளாதாரத் தன்மையையும் இழந்து, அதன் மூலம் நமது நாட்டின் இறைமையையும் இழந்து நிற்கிறோம். எமது நாடு ஏகாதிபத்திய நுகத்தடியில் முன்னெப்போதையும் இறுக்கமாக இப்பொழுது பிணைக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் தொடர்ந்தும் முதலாளித்துவ சக்திகள் மாறி மாறி அதிகாரத்தில் இருப்பதுதான்.

ஏகாதிபத்திய சக்திகள் நாட்டின் இறைமையைப் பாதிக்கும் வகையில் தலையீடு செய்வதற்கு ஏதுவாக நாம் விட்டு வைத்திருக்கும் இன்னொரு முக்கியமான விடயம் தேசிய இனப் பிரச்சினையாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் நடைமுறைக்கு வந்த மூன்று அரசியல் அமைப்புகளுமே தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தவறிவிட்டன. இது தற்செயலாக நடைபெற்ற ஒரு விடயம் அல்ல. இது ஏகாதிபத்தியம் தனது நேரடி ஆட்சியை விட்டுச் செல்லும் நாடுகளில் திட்டமிட்டு ஏற்படுத்தி விட்டுச் செல்லும் ஒரு தந்திரமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கையில் தனது நேரடி ஆட்சியைக் கைவிடும் போது, சிங்களப் பெரும்பான்மை இனத்தின் தரகு முதலாளித்துவத்திடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டுச் சென்றது. அந்தச் சிங்களத் தரகு முதலாளித்துவம் சிங்களப் பொதுமக்களிடம் இருந்து எதிர்காலத்தில் வரப்போகும் பொருளாதார நெருக்கடியைத் திசைதிருப்பி விடுவதற்காக, சிங்கள மொழியையும் பௌத்த மதத்தையும் ஒரு ஆயுதமாக உபயோகிக்கும் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது. இந்த வழி முறையையே இன்று வரை சகல சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளும் கைக்கொண்டு வருகின்றன. (சோசலிசம் பேசும் ஜே.வி.பி. உட்பட) மறுபக்கத்தில் இந்தச் சிங்கள இனவாதம் தமிழ் முதலாளித்துவ வர்க்கம் தமிழ் இனவாதம் பேசி அரசியலில் நீடித்திருப்பதற்கான ஆயுதமாகவும் பயன்படுகிறது.

இத்தகைய சூழ்நிலைகளால்தான், அதாவது பொருளாதாரச் சுயசார்பின்மை, தேசிய சிறுபான்மை இனங்களின் நியாயபூர்வமான உரிமைகளை வழங்கத் தவறியமை, என்ற காரணிகள்தான் இலங்கையில் மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகளும், இந்தியா போன்ற பிராந்திய விஸ்தரிப்புவாத சக்திகளும் தலையீடு செய்யவும், இலங்கையின் இறைமையைக் கட்டுப்படுத்தவுமான சூழலைத் தோற்றுவித்துள்ளது.

சிங்கள முதலாளித்துவ வர்க்கம் இன்று பல கூறுகளாக பிரிந்து கிடக்கின்றது. இவற்றில் சில பிரிவுகள் ஏற்கெனவே ஆட்சியதிகாரத்தில் இருந்துள்ளன. வேறு சில ஆட்சிக்கு வருவதற்கான பிரயத்தனங்களில் ஈடுபட்டுள்ளன. இவர்கள் யார் ஆட்சிக்கு வந்தாலும், இலங்கையின் இரண்டு பிரதான பிரச்சினைகளான பொருளாதாரப் பிரச்சினையையும், இனப் பிரச்சினையையும் தீர்க்கப் போவதில்லை. இது தமிழ் முதலாளித்துவ வர்க்கக் கட்சிகளுக்கும் பொருந்தும்.

இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உண்மையான ஒரு தீர்வுகாண வேண்டுமானால். இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பால், உண்மையான ஒரு சோசலிச அமைப்புத் தோன்றி, மக்களுக்காகப் போராடி புதியதொரு சோசலிச – ஜனநாயக அரசை அமைப்பதே ஒரே வழி. இலங்கையின் இன்றைய சூழலில் இது ஒரு மிகவும் கடினமான பணி. இருப்பினும் இதைத் தவிர வேறு வழி எதுவும் கிடையாது.

# 'அவுகுஸ்' தவறானதொன்று, சீனா குறித்து அச்சம் தேவையில்லை

## -ரணில் விக்கிரமசிங்க

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுக்கு இடையிலான 'அவுகுஸ்' (Aukus) பாதுகாப்பு உடன்படிக்கையை தவறானதொன்றென அமெரிக்காவில் வைத்து அறிவித்திருக்கிறார். மேலும் தனது நாடு கடனில் மூழ்கியுள்ள அதே நேரத்தில், வெளித்தெரியும் பெய்ஜிங்கின் (சீனாவின்) செல்வாக்கு குறித்த எந்தவொரு கவலையையும் அவர் நிராகரித்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் நிகழ்வுகளுக்கு அப்பால், நியூயார்க்கில் சர்வதேச அமைதிக்கான கார்னகி அறக்கட்டளை (Carnegie Endowment for International Peace) ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் 19.09.2023 அன்று கலந்துரையாடிய அவர், ''அவுகுஸ்' நாடொன்றிற்கு– சீனாவிற்கு – எதிராக நகர்த்தப்பட்ட ஓர் இராணுவ கூட்டணி', என்று கூறினார்.

'இது ஒரு மூலோபாய தவறு என்றே நான் நினைக்கிறேன். அவர்கள் (அவுஸ்திரேலியா, பிரித்தானியா, அமெரிக்கா) தவறொன்றினை செய்துவிட்டார்கள் எனவும் நான் கருதுகிறேன்' என்று தொடர்ந்த விக்கிரமசிங்க, இந்த கூட்டணி தேவையற்றது என்றும் விவரித்தார். 'இது அவசியமானதென நான் நினைக்கவில்லை.' என அவர் மேலும் கூறினார்,

செப்டம்பர் 2021 இல் உருவாக்கப்பட்ட 'அவுகுஸ்' அமைப்பானது, அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்கள் பற்றிய தகவல்களையும் தொழில்நுட்பங்களையும் பகிர்தல், செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் தொழில்நுட்பங்கள் மற்றும் கடலுக்கடியில் மேலதிக திறன்களை உள்ளடக்கிய பாதுகாப்பு கூட்டாண்மையென அதில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அரசாங்கங்களால் வர்ணிக்கப்படுகின்றது.

விக்கிரமசிங்க "இந்தோ–பசிபிக்" என்ற வார்த்தையைப் பார்த்து சிரித்தவாறு, சமீபத்தில் உருவாக்கப்பட்ட பூகோள மூலோபாய மண்டலத்தை ஒரு



'செயற்கைக் கட்டமைப்பு' என்று அழைத்தார்.

'இந்தோ–பசிபிக் என்றால் என்னவென்று எவருக்கும் தெரியாது', என்று அவர் கூறினார். 'சிலருக்கு, இந்தோ–பசிபிக் இந்தியாவின் மேற்கு எல்லையில் முடிவடைகிறது, மற்றவர்கள் அதனை ஆபிரிக்காவுக்குள் எடுத்துச் செல்கிறார்கள், மேலும் சிலருக்கு அது மேற்கு பசிபிக்கில் முடிவடைகின்றது, ஏனையவர்கள் தெற்கு பசிபிக் வரை கொண்டு போகின்றார்கள்.'

சீன–அமெரிக்க போட்டி மேற்கு பசிபிக்கில் தோன்றியது, ஆனால் இந்தப் போட்டி இப்போது இந்து சமுத்திரத்திற்கும் தெற்கு பசிபிக்கிற்கும் பரவியுள்ளது என்று இலங்கை ஜனாதிபதி கூறினார்.

'நாங்கள் எதற்காக இதற்குள் இழுக்கப்படுகின்றோம்? இதனைப் புரிந்துகொள்வது எங்களுக்கு கடினமாக இருக்கின்றது' என்று கூறிய அவர், தனது பல தசாப்த கால அரசியல் வாழ்க்கையில் பல புவிசார் அரசியல் கூட்டணிகள் மாறுவதைக் கண்டுள்ளேன் என்பதை அவர் அழுத்திக் கூறினார்.

'அடுத்த கட்ட போட்டி நடந்து வருகிறது. அது ஆசியாவில் இடம்பெற்று வருகின்றது. ஆசியாவில் அவர்களின் செல்வாக்கு மண்டலத்தை எவ்வாறு பிரிக்கப் போகிறார்கள் என்பது சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான கேள்வியாகும்' என்று விக்கிரமசிங்க கூறினார்.

ஆசியாவினுள் நேட்டோவின் எதிர்பார்க்கப்படும் விரிவாக்கம் குறித்து, 'இந்தியப் பெருங்கடலைப் பொறுத்தவரை, நாங்கள் எந்தவொரு இராணுவ நடவடிக்கையையும் விரும்பவில்லை' அத்தோடு, பிராந்தியத்தில் உள்ள பெரும்பாலான நாடுகள் 'நேட்டோ அருகில் எங்கேனும் வருவதை விரும்பவில்லை' என்று அவர் தெரிவித்தார்.

சீனாவின் கடன் வழங்கும் நடைமுறைகள் குறித்த விவாதங்களில், 'கடன் பொறி இராஜதந்திரம்' பற்றிய குற்றச்சாட்டுகளுடன் இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகம் நீண்டகாலமாகவே மேற்கோள் காட்டப்பட்டு வருகின்றது. ஆனால் தனது உரையில், இந்து சமுத்திர பிராந்தியம் எவ்வாறு செயல்படுகின்றது என்பது குறித்து மேற்கத்திய நாடுகளுக்கு குறைவான புரிதல் இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

இலங்கையில் இராணுவத் தளமொன்றினை இயக்குவதற்கு பெய்ஜிங்கை கொழும்பு அனுமதிக்கிறது என்ற செய்திகளை அவர் நிராகரித்தார். அம்பாந்தோட்டை துறைமுகம், சீனா அரசுக்குச் சொந்தமான சீனாவின் வணிகர்கள் குழுவால் (China Merchants Group) நடத்தப்படும் ஒரு வர்த்தகத் துறைமுகமாக உள்ளது என்றும், துறைமுகத்தின் பாதுகாப்பு இலங்கை கடற்படையிடம் இருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

இந்தியாவை உளவு பார்ப்பதற்காக இலங்கைக்கு பெய்ஜிங் கப்பல்களை அனுப்புகிறது என்று நியூ டெல்லி சமீபத்தில் தெரிவித்த கூற்றுக்களையும் அவர் நிராகரித்தார்.

'இலங்கையில் உளவுக் கப்பல்கள் இல்லை. உளவுக் கப்பலொன்றினை எவராலும் சுட்டிக்காட்ட முடியுமா என்று எனக்குத் தெரியாது' என்று கூறிய விக்கிரமசிங்க, இலங்கையின் தேசிய நீரியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் சீன விஞ்ஞான கழகத்திற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் கீழ் கடந்த 10 ஆண்டுகளாக வருகை தரும் 'ஆராய்ச்சிக் கப்பல்கள்' அவை என்று விவரித்தார்.

(இச்செய்தி இலங்கையிலிருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' பத்திரிகையில் 19.09.2023 அன்று வெளியாகியது)